www.padippakam.com

வானவில்

VAANAVIL
ISSUE – 38 FEBRUARY 2014

இதழ் - 38 மாசி 2014

# இந்தியாவில் மத, இன, சாதி வெறி பிடித்த பாரதிய ஜனதாக்கட்சி ஆட்சிக்கு வர மக்கள் அனுமதிக்கக்கூடாது!

இந்தியாவில் எதிர்வரும் மே (2014) மாதத்தில் பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கிறது. அதையொட்டி தேசிய அளவலும், மாநிலங்கள் அளவிலும் புதிய அரசியல் கூட்டுகள் உருவாகியுள்ளன.

இந்தத் தேர்தலில் பிரதான போட்டி காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கும், பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான வலதுசாரிக் கூட்டணிக்கும் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.



அதேநேரத்தில் இடதுசாரி கட்சிகளின் முன்முயற்சியால் சில கட்சிகள் ஒன்று சேர்ந்து 'மூன்றாவது அணி' என்ற பெயரில் ஒரு கூட்டை உருவாக்கியுள்ளனர். இந்தக் கூட்டு தேர்தலில் மக்களின் ஆதரவை எவ்வளவு தூரம் பெறும் அல்லது தொங்கு பாராளுமன்றம் அமைந்தால் இந்தக் கூட்டு ஒரு தீர்க்கமான சக்தியாக உருவெடுக்குமா என்பதை இப்போதைக்குக் கணிப்பிட்டுக் கூறமுடியாத நிலைமையே இருக்கின்றது.

கடந்த 10 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சி தலைமையிலான அரசாங்கமே இந்தியாவில் அதிகாரத்தில் இருந்து வருகின்றது. அந்த இரண்டு காலகட்ட அரசாங்கங்களிலும் மன்மோகன் சிங்கே பிரதமராக இருந்து வருகின்றார். கட்சித் தலைவியும், புலிகளால் மனித வெடிகுண்டு மூலம் கொலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் விதவை மனைவியுமான சோனியா காந்தி பிரதமராக வருவதற்கு காங்கிரஸ் கட்சியில் போதிய ஆதரவிருந்தும், அவர் இத்தாலியைச் சேர்ந்த வெளிநாட்டுக்காரர் என்ற தேசிய வெறியையும், அவதூறையும் பாரதீய ஜனதா கட்சி கிளப்பியதால், அவருக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

ஆனால் முதலாளித்துவ சக்திகளைப் பொறுத்தவரையில் சோனியா காந்தியை விட மன்மோகன் சிறந்த தெரிவு என்றுதான் சொல்ல வேண்டும். பொருளாதார மேதை என்று வர்ணிக்கப்படும் மன்மோகன் தான், இந்திரா காந்தி நடைமுறைப்படுத்திய தீவிர தேசியவாத 'மூடுண்ட' பொருளாதாரக் கொள்கையைத் தூக்கி எறிந்துவிட்டு கட்டுப்பாடற்ற திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுலுக்குக் கொண்டு வந்தவர். அத்துடன் அவர் மேற்கத்தைய, குறிப்பாக அமெரிக்க விசுவாசியும்கூட.

அதனால்தான் மன்மோகனின் முதல் ஐந்தாண்டுகால ஆட்சிக்கு நிபந்தனையுடன் ஆதரவளித்து வந்த இடதுசாரிக் கட்சிகள், அவரது அரசு அமெரிக்காவுடன் செய்து கொண்ட அணுசக்தி உடன்படிக்கை காரணமாகவும், அவரது அரசு தேசநலன் கருதாது அந்நிய முதலீடுகளுக்கு கட்டுப்பாடின்றி கதவுகளைத் திறந்துவிட்டதாலும், அரசுக்கான தமது ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டன. இருந்தும் வேறு சில உதிரிக் கட்சிகளின் உதவியுடன் காங்கிரஸ் தலைமையிலான அரசு தனது ஆட்சியைத் தொடர்ந்தது.

இடதுசாரிகளின் இந்த முடிவு காங்கிரஸ் அரசுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதைவிட, இடதுசாரிகளுக்கே அதிக பாதிப்பை ஏற்படுத்தியது. அதன்பின்னர் நடந்த பொதுத்தேர்தலில் இடதுசாரிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகை வெகுவாகக் குறைந்தது. மேற்கு வங்காளத்தில் சுமார் 30 வருடங்களாகத் தொடர்ந்து ஆட்சியில் இருந்து வந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான அரசு தேர்தலில் மோசமாகத் தோற்று ஆட்சியை இழந்தது. அதேபோல கேரளாவிலும் அக்கட்சி தலைமையிலான அரசு ஆட்சியை இழந்தது. இதற்குக் காரணம் அவர்கள் காங்கிரஸ் அரசு சம்பந்தமாக மேற்கொண்ட அவசரப்பட்ட, தூரதிருஸ்டி அற்ற முடிவுதான் என்ற விமர்சனமும் உண்டு.

மறுபக்கத்தில் மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான அரசைத் தொடர்ந்து ஆதரித்து வந்த மாநிலக் கட்சிகளில் ஒன்று மு.கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால் இலங்கையில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழகத்தில் இனவாத, பிழைப்புவாதக் கட்சிகளால் (இதில்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

நூறு சிந்தனை மலரட்டும்

படிப்பகம்

www.padippakam.com

# விழித்தெழுங்கள்!

2009 ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் முடிவடைந்த யுத்தத்தின் பின்னர் இலங்கை தேசத்துக்கு அமைதி, சமாதானம், சுபீட்சம் பிறக்குமென்றே, இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் வாழும் சகல இனங்களையும் சேர்ந்த ஜனநாயக சக்திகள், இலங்கையின் நட்பு நாடுகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் பல சர்வதேச நடுநிலை அவதானிகளும் எண்ணினார்கள். ஆனால் அந்த எதிர்பார்ப்பு தவிடு பொடியாகிவிடும் போல் தெரிகிறது. அதாவது, அதிசயங்கள் ஏதாவது நிகழ்ந்தாலன்றி, இலங்கையில் நிரந்தர அமைதிக்கு இன்னும் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் போல் தெரிகிறது.

கால் நூற்றாண்டுக்கு மேலாக நீடித்த இந்த யுத்தம் இரு தரப்பினராலும் (இலங்கை அரசு, புலிகள்) வெல்லப்பட முடியாதென்ற கருத்தே பொதுவாக எல்லோரிடமும் நீண்ட காலமாக நிலவியது. இதனால் எப்போது, எப்படி முடிவடையப் போகுதென பலரும் அங்கலாய்த்தார்கள். ஆனால் 2009 ஆண்டு முற்பகுதியில் புலிகள் இலங்கை இராணுவத்தால் தோற்கடிக்கப்படுவது தவிர்க்க முடியாதது என்பது தெளிவாக தெரிந்த பொழுது, யுத்தநிறுத்தம் ஒன்றின் மூலம் யுத்தத்தினை வெற்றி தோல்வியின்றி முடிவுக்கு கொண்டுவர பிரதானமாக **மூன்று சக்திகள்** முனைந்தன. இம்மூன்று சக்திகளின் அனைத்து முயற்சிகளையும் மீறி இலங்கை இராணுவத்தால் யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டது.

தமது எண்ணம் நிறைவேறாததால், மீண்டும் இலங்கையில் அமைதியின்மை ஏற்படுத்த வேண்டுமென்று கங்கணங்கட்டி, தற்போது இம்மூன்று சக்திகளும் கூட்டுச் சேர்ந்துள்ளன. எனினும் இம்மூன்று சக்திகளும் தத்தமது நலன்கள் சார்ந்து, வெவ்வேறு விதமான அரசியல் நிரல்களை கொண்டிருக்கின்றன.

இலங்கையில் யுத்தம் நிகழ்ந்த காலப்பகுதியிலும் அதற்கு முன்னரும் இலங்கையிலிருந்து வெளியேறி மேற்கு ஐரோப்பிய நாடுகளையும் மற்றும் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளையும் வதிவிடமாகக் கொண்டு, நீண்ட காலமாக புலியை ஆதரிக்கும், இலங்கை அரசையும் சிங்களவர்களையும் எதிர்க்கும் தமிழர்கள் **முதலாவது வகையை**ச் சார்ந்த சக்திகள். இவர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு 'தனிநாடு' வேண்டுமென்ற குறுந்தமிழ் தேசியவாத கொள்கையைக் கொண்டவர்கள்.

அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, மேற்கு ஐரோப்பிய நாடுகள் **இரண்டாவது வகையி**ல் உள்ளடக்கூடிய சக்திகள். தற்போதைய மகிந்த ராஜபக்ச தலைமையிலான இலங்கை அரசின் ஏகாதிபத்தியத்திற்கு வளைந்து கொடுக்காத தன்மையால், மகிந்த ராஜபக்ச அரசைக் கவிழ்த்து இலங்கையில் ஏகாதிபத்திய சார்பு அரசை நிறுவுவது என்பதே இவர்களது நோக்கம். அதைவிட கனடா, பிரித்தானிய ஆளுங்கட்சிகள் இலங்கை அரசை இலக்கு வைக்கும் தமது செயற்பாடுகள் மூலம், தத்தமது நாடுகளிலுள்ள இலங்கைத் தமிழர்களது வாக்குகளை தம்வசப்படுத்தலாமெனவும் நினைக்கிறார்கள்.

இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள சினிமா வழி வந்த திராவிடக்கட்சிகளையும் இடதுசாரி மற்றும் வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிகளையும் **மூன்றாவது வகை**யினராக குறிப்பிடலாம். இலங்கைத் தமிழர்கள் பற்றி மேடைகளில் உரக்கப் பேசியும் அறிக்கைகள் விடுவதினூடாக, தமிழக மக்கள் அவர்கள் மீது கொண்டிருக்கும் பற்றுதலையும் அனுதாபத்தினையும் தேர்தல் காலங்களில் வாக்குளை அதிகரிக்க பயன்படுத்தலாம் என்பதே இவர்களது நோக்கம். இதனால் இலங்கையில் தமிழர்கள் மீது காலங்காலமாக நடத்தப்பட்ட வன்முறைகள், முள்ளிவாய்க்கால் இறுதி யுத்த நிகழ்வுகள் போன்றவற்றினை மிகைப்படுத்தியும், இன்னமும் இலங்கைத் தமிழர்கள் கொடுமைக்குள்ளாக்கப் படுவதாக ஏட்டிக்கு போட்டியாக பொய்கள் கூறியும் இவர்கள் வாக்குகளுக்காக அலைகிறார்கள்.

இதுதவிர அதிதீவிரவாத இடதுசாரியம் பேசியும், அடிநாக்கில் தமிழ் தேசியத்தை ஒழித்து வைத்து நுனிநாக்கில் மார்க்சியமும் கக்கும் வகையறாக்களும் இலங்கை அரசைக் கவிழ்க்க வேண்டுமென்று கறுவிக்கொண்டு திரிகிறார்கள்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் புலிகளின் அராஜகங்களுக்கு எதிராக சிறியளவிலேனும் குரல் கொடுத்த ஜனநாயக சக்திகள், இலங்கைக்கு நேரவிருக்கும் அபாயத்தினை உணர்ந்து மீண்டும் புத்துணர்ச்சியுடன் செயலில் இறங்க வேண்டும். *

---

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

---

## அஞ்சலி

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகப் பல்லாண்டுகள் பணியாற்றி, இலங்கையின் முற்போக்கு கலை - இலக்கிய வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்புச் செய்த 'பிரேம்ஜி' நடராசா ஞானசுந்தரம் அவர்கள் நோய்வாய்ப்பட்ட நிலையில் தமது 84ஆவது வயதில் 11-02-2014 இல் கனடாவில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவருக்கு 'வானவில்' தனது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

# சேர்.பொன்.இராமநாதன் வாழ்வும் பணியும் மற்றும் கல்வி – மொழிச் சிந்தனைகளும்

காவலூர் பாலன்

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட அருணாசலம் பொன்னம்பலம் முதலியாருக்கும், குமாரசாமி முதலியாரின் மகள் செல்லாச்சிக்கும் கொழும்பு செட்டியார் தெரு வீதியில் அமைந்திருந்த வீட்டில் 07-12-1849 இல் குமாரசாமியும், 16-04-1851இல் (சேர்.பொன்) இராமநாதனும், 14-09-1853இல் (சேர்.பொன்) அருணாசலமும் பிறந்தனர்.

இம்மூன்று பிள்ளைகளையும் பெற்றெடுத்த திருமதி செல்லாச்சி அவர்கள் 1854இல் தமது 19ஆவது வயதில் காலமானார். தாயை இழந்த சிறார் மூவரும் தமது அன்னையின் தாயாரான திருமதி விசாலாட்சி அவர்களால் சிறப்பாக வளர்க்கப்பட்டனர். சிறுவர்களின் அப்போதைய வயது முறையே 5, 3, 1 ஆகும்.

அவர்களது குடும்பம் பொருளாதார ரீதியிலும் சரி, சமூக ரீதியிலும் சரி, மிக உயர்ந்த பின்னணியைக் கொண்டதாக இருந்துள்ளது. இராமநாதனின் தாய்வழிப் பேரனான குமாரசாமி முதலியாரே 1834ஆம் ஆண்டில் சட்ட நிரூபண சபையில் தமிழர்களின் முதல் பிரதிநிதியாக நியமனம் பெற்றவராகும்.

அன்று இலங்கையில் உயர் ஆங்கிலப் பாடசாலையாக விளங்கிய 'கொழும்பு அக்கடமி'யில் பாலர்கள் மூவரும் ஆரம்பக் கல்வியைப் பயின்றனர். அப்பொழுது இராமநாதன் சாதாரண மாணவனாகவே அடையாளம் காணப்பட்டார். ஆனால் அவரது சகோதரர்கள் இருவரும் கல்வியில் தமது திறமையினை வெளிப்படுத்தினார்கள். எனினும் இராமநாதன் நூல் வாசிப்பில் ஆர்வமுள்ளவராக இருந்துள்ளார்.

பின்னர் சி.வை.தமோதரம்பிள்ளை அவர்களின் வழிகாட்டல் உதவியுடன் சென்னை பல்கலைக்கழகத்தில் தங்கள் உயர்கல்வியைத் தொடர்ந்தனர். ஆனால் என்ன காரணத்தாலோ தமது சென்னை பல்கலைக்கழகக் கல்வியை இடைநிறுத்திய இருவரும் அவர்களது மாமன் சேர்.முத்துக்குமாரசாமியின் வழிகாட்டலில் சட்டம் பயின்று மிகக் குறுகிய காலத்திலேயே (1971இல்) உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஆயினர்.

இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய விடயம் என்னவெனில், சேர்.பொன். இராமநாதன் இலத்தீன், கிரேக்கம், கீபுறா, சிங்களம், சமஸ்கிருதம், ஆங்கிலம் என பன்மொழி ஆற்றல் பெற்றவராக இருந்ததுடன், தனது தாய் மொழியான தமிழிலும் மிக உயர்ந்த புலமை உடையவராக விளங்கினார். அவரிடம் இன்று பல தமிழ் தலைவர்களிடம் உள்ளதைப் போல அன்று இனவெறிப் பார்வை ஒரு சிறிதளவும் இல்லை என்பதை, 1879இல் அவர் கூறிய பின்வரும் கூற்று தெளிவாக நிரூபிக்கின்றது:

"...இன்று சிங்கள, தமிழ் இளைஞர் வேண்டுவது ஒழுக்க நடத்தையே...அரசு மாணவர் ஒழுக்க அடிப்படையில் சிந்தித்து வாழ ஆவன செய்ய வேண்டும்".

எனவே அவர் "சுய உதவி" என்ற ஸ்மைல் எழுதிய நூலினையும், "ஒழுக்க விஞ்ஞானம்" என்னும் பினெமிங்கின் நூலினையும் சுதேச மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

அத்துடன் தாய்மொழிக் கல்விக்கு இலங்கையர் மிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமெனவும் என்றும் எப்பொழுதும் வலியுறுத்தி வந்துள்ளார். 1904ஆம் ஆண்டில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் வெள்ளிவிழாவில் ஆற்றிய உணர்ச்சி மிக்க உரையில் பின்வருமாறு இயம்பியுள்ளார்:

"நான் எனது பிள்ளைகளை வீட்டில் ஆங்கிலம் பேச அனுமதிக்கமாட்டேன்". மேலும் தொடர்ந்த உரையில் சிங்களத்தின் முக்கியத்துவத்தை சிங்கள மக்களுக்கும் முன்மொழிந்தார்.

"உங்களது முழுச்சக்தியையும் பயன்படுத்தி ஆங்கிலத்தையோ அல்லது வேறு எந்த மொழியையோ ஊதாசீனம் செய்து சிங்களத்தைக் கற்றுக்கொள்வதை



Sir Ponnambalam Ramanathan

உருவாக்கிக்கொள்ள வேண்டும். அதைச் செய்தீர்களாயின், தேசத்திற்கு உங்கள் கடமையைச் செய்தவராவீர்" ("If Sinhalese lips without speak the Sinhalese language, who else there speak it?")

"இங்கு பிறந்த சிங்களவரோ, தமிழரோ ஆங்கிலத்தையும், அவரது சொந்த மொழியையும் அறிந்திருக்க வேண்டும் என விரும்புகிறேன். அதன்மூலம் இத்தீவின் நலன்நாடிய செயல்களில் அதிகம் ஒத்துழைப்போராய் இருக்க முடியும்". இராமநாதனின் வழிகாட்டியும், தாய்மாமனுமாகிய சேர்.முத்துக்குராமசாமியும் இவரைப்போலவே



படிப்பகம்

www.padippakam.com

தமிழிலக்கிய அறிவும், இசை நாட்டமும், சமயப்பற்றும் மிக்கவராக விளங்கியதுடன், தமிழ், சிங்களம், ஆங்கிலம், பாளி, கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளில் பாண்டித்தியமும் பெற்றிருந்தார். இவரது மகனே (கலாஜோதி) ஆனந்தக்குமாரசாமி என்ற பெருமகனாவார். (இவரது தாய் ஆங்கில மாது)

சேர்.பொன்இராமநாதன் அவர்களின் தமிழ்மொழிப் புலமை பற்றி தமிழ்நாட்டின் பெரும் தமிழறிஞர், வேதவிற்பன்னர் உ.வே.சாமிநாதையர் பின்வருமாறு கூறியிருக்கின்றார்:

"நான் கேட்ட தமிழ் உரைகளிலே, தமிழ் மனத்தை ஆங்கிலத்தோடு இசைத்துக் குழப்பாமல், ஆங்கிலம் அறியாதவரைப் போலவே அவர் (இராமநாதன்) பேச்சுத் திறமையை அறிந்திருந்தேன்....தமிழ்நாட்டினரும் அவரைத் தமிழ் வளர்த்த ஒருவராக வைத்துப் போற்றுதல் கடமையாகும்".

சேர்.பொன்.இராமநாதன் தனது வாழ்வின் கடைசிக் காலத்தில் தேசியரீதியிலான கல்வியில் முழுக்கவனம் செலுத்தி, பல இலட்சங்களை (கிட்டத்தட்ட 10 இலட்சம் ரூபா) செலவு செய்து 1917இல் மருதனார்மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரியையும், 1926இல் திருநெல்வேலியில் (அவரது மனைவியின் பெயரில்) பரமேஸ்வரா கல்லூரியையும், ஒவ்வொன்றும் 25 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவியதுடன், இனவெறி, மொழிவெறி, மதவெறி என்பனவற்றை ஓரம்கட்டி, 1925ஆம் ஆண்டில் பரமேஸ்வராக் கல்லூரியில் பௌத்த, கிறிஸ்தவ மாணவர்களும், குருமாரும் கல்வி கற்பதற்கும் வழிசமைத்தார்.

1879இல் சட்ட நிரூபணசபையில் இராமநாதன் பேசும்போது, கல்வியை இலவசமாக மக்களின் கதவுகளுக்கே கொண்டு செல்வதை அறிவு மிகுந்த சிங்கள மன்னர் தம் இலட்சியமாகக் கொண்டிருந்தனர் என்றும், இலங்கையைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்த ஒல்லாந்தரும் இக்கொள்கையைப் பின்பற்றினர் என்பதையும், பின்வருமாறு எடுத்தியம்பியுள்ளார்:

"கி.பி.1240இல் இலங்கை மன்னனாயிருந்த மூன்றாம் பராக்கிரமபாகு, ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பாடசாலை நிறுவ நடவடிக்கை எடுத்தான்" எனச் சட்ட நிரூபணசபையில் குறிப்பிட்ட இராமநாதன், 'ஒல்லாந்தரும் இக்கொள்கையினைப் பின்பற்றினர் என்றும், ஆங்கிலேயரின் ஆட்சியிலும் கல்வியினை அரசு பொறுப்பேற்று வழங்க முன்வர வேண்டும்' என்றார்.

சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் அன்றே ஏழைகளுக்கும் கல்வி சென்றடைய வேண்டும் எனச் சிந்தித்ததுடன், தனது செயல்மூலம் அதை நடைமுறையிலும் நிரூபித்தவர். இராமநாதன் மகளிர் கல்லூரியில் அநாதைப் பிள்ளைகளுக்கு வதிவிட வசதியுடன் கல்வி பயில வழி சமைத்தவர். இதை நிறுவும் வகையில் அவர் சட்டசபையில் ஆற்றிய பின்வரும் உரை சான்று பகர்கிறது:

"இலங்கையில் உள்ள செல்வந்தர்கள் தங்கள் சுகபோகங்களில் மூழ்கி இருக்கின்றார்கள். வறிய மக்களின் கல்வி பற்றிய தேவையை உணராது உள்ளார்கள். எதிர்காலத்தில் அரசு வறிய மக்களின் கல்விக்காக பெருமளவு பங்கைச் செலவு செய்ய வேண்டும்".

இராமநாதன் அவர்களின் ஆளுமை உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தியவர்கள் ஆறுமுகநாவலர், ராவ்பகதூர் சி.வை.தமோதரம்பிள்ளை, சேர்.முத்துக்குமாரசாமி, றிச்சார்ட் மோர்கன், அருட்பரானந்தர் ஆவர். அவரை அரசியல் களத்தில் 28 வயதில் முன்னிறுத்தியவர் ஆறுமுகநாவலரே.

இவ்வாறு சேர்.முத்துக்குமாரசாமி, சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன்.அருணாசலம், பெரியார் ஹான்டி பேரின்பநாயகம், தோழர்கள் சி.தர்மகுலசிங்கம் (ஜெயம்) பொன்.கந்தையா, அ.வைத்திலிங்கம், மு.கார்த்திகேசன் போன்றவர்களால் தமிழ் மக்களுக்கு இருந்த தலைமை பறிபோய், இன்று புலிகளினதும், புலி ஆதரவாளர்களினதும் மா:.பியா தலைமை என்ற இழிநிலைக்கு தமிழ் சமூகம் தாழ்ந்துபோய் விட்டது. இந்நிலை அதன் சமூக இருப்பையே இன்று கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன்.அருணாசலம் இருவரினதும் தேச சேவையைப் போற்றி நன்றி உணர்வுடன் சிங்கள மக்கள் ஏனையவர்களின் உதவியுடன் அவர்கள் இருவரினதும் சிலைகளை 1946இல் இலங்கைப் பாராளுமன்ற வளவினுள் நிறுவினார்கள். ஆனால் அவர்களால் அதிகளவு நன்மை பெற்ற யாழ்ப்பாணத்தவர்கள் அவர் மறைந்து (1930) 60 வருடங்களின் பின்னர்தான் அவரது உருவச்சிலையை, அதுவும் மருதனார்மடத்தில் 1990இல் நிறுவினார்கள்.

இங்கே நாங்கள் ஆறுமுகநாவலரையும், அவரால் சமூக - அரசியல் செயல்பாட்டிற்கு முன்தள்ளப்பட்ட சேர்.பொன்.இராமநாதனையும் மறு வாசிப்புச் செய்யும்போது, அவர்களது நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்க சார்பு நிலைப்பாட்டையும், அவர்களது சமூக சார்பு, மொழி சார்பு நிலையையும் வேறுபடுத்தியே பார்க்க வேண்டும். இருவருமே யாழ்.சைவ வேளாள ஆளும் வர்க்க சார்பு நிலையுடன் செயல்பட்ட போதும், சமூக மறுமலர்ச்சிக்கு ஒரு சிறப்பான பங்களிப்பை வளங்கியுள்ளனர்.

இதனால்தான் இலங்கையில் இலவசக் கல்வியின் தந்தையான சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா, இராமநாதன் அவர்களைப் பின்வருமாறு போற்றியுள்ளார்:

"In the dire hour of our need valiant son of the North came readily and generously to help us. We claim his as our saviour".

1915இல் சிங்கள - முஸ்லீம் இனக்கலவரத்தைத் தொடர்ந்து பிரித்தானிய காலனித்துவ அரசால் இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. இதனால் சிங்கள மக்கள் எவ்வாறு துன்பத்திற்கு உள்ளாகினர் என்பதை மிக நுணுக்கமாக, உள்ளம் உருகும் வண்ணம் சட்டசபையில் 8 மணித்தியாலங்கள் எடுத்துரைத்து நியாயங்களை விளக்கிப் பேசினார்.


படிப்பகம்

www.padippakam.com

பின் 1915இல் முதலாம் உலகப் போரின் மத்தியில் தனது உயிரைப் பணயம் வைத்து கப்பலில் பிரித்தானியா (லண்டன்) சென்று இலங்கை மக்களுக்காக, குறிப்பாக மிக மோசமாக நசுக்கப்பட்ட சிங்கள சமூகத்திற்கு நீதியைக் கோரி அவர்களை அடக்குமுறையிலிருந்து விடுவித்தார்.

இதனால்தான் சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்க முதல் ஏ.ஈ.குணசிங்க வரையிலான சிங்களத் தலைவர்கள் பிரித்தானியாவிலிருந்து திரும்பி கொழும்புத் துறைமுகம் வந்த அவரை ஒரு அழகிய வண்டியில் இருத்தி, குதிரைகளுக்குப் பதிலாக தாமே கொழும்பு வீதிகளில் இழுத்துச் சென்றனர். (இப்படம் இப்பொழுது யாழ்ப்பாண பல்லைக்கழகம் அமைந்திருக்கும் முன்னைநாள் பரமேஸ்வரா கல்லூரியில் நீண்டகாலம் வைக்கப்பட்டிருந்தது) அப்பொழுது டீ.எஸ்.சேனநாயக்க, சேர்.பொன்.இராமநாதன் குறித்து பின்வருமாறு புகழ்ந்துரைத்திருக்கிறார்:

“The greatest Ceylonese of all times.”

அத்துடன் Lord Rosebury, “The most accomplished speaker in my empire” (எனது பேரரசிலுள்ள தலைசிறந்த பேச்சாளர்) எனப் புகழாரம் சூட்டியுள்ளார்.

இவை மட்டுமின்றி, இராமநாதன் மிகச் சிறந்த சமயப் பேச்சாளருமாவார். அவர் இந்து சமயம் பற்றி இலங்கை, இந்திய நாடுகளில் மட்டுமின்றி, லண்டன் போன்ற நகரங்களிலும் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கிறார்.

அவருடைய புலமையைத் தெரிந்து கொள்வதற்கு அவர் இயற்றிய பின்வரும் நூல்கள் இன்றும் துணையாக விளங்குகின்றன:

1. செந்தமிழ் இலக்கணம் (500இற்கு மேற்பட்ட பக்கங்கள்)
2. மேற்கத்தைய நாடுகளில் ஆன்மீக வளர்ச்சி (Culture of the soul among western nations)
3. மேல்நாட்டு மாணவர்களுக்கு கீழைத்தேய கொள்கை விளக்கம் (Eastern pictures to western students)
4. Commentaries in the Gospel according to Saint Mathew and Saint John (கிறிஸ்துவின் மாணவர்களாகிய தூய மத்தியு, தூய யோன் எழுதிய சிறப்புச் செய்திகளுக்கு உரை விளக்கம்)
5. பகவத் கீதை (இதை முதலில் தமிழில் தந்த பெருமை அவரையே சாரும்)
6. 1915 இனக்கலவரமும் (சிங்கள - முஸ்லீம்), இராணுவச் சட்டமும் (1915 Riots and Martial Law)

அவருடைய சமூக அமைப்புச் செயற்பாடுகள்:

1. சட்டப் படிப்புக்குரிய அவையும், இலங்கை சட்டக் கல்லூரியும் தோன்றுவதற்கு பணியாற்றியமை.
2. New Law Reports என்ற பெயரில் வெளிவந்த பத்திரிகையின் முதலாவது ஆசிரியர்.
3. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு புகையிரதப் பாதை போட வேண்டும் எனக் குரல் கொடுத்தவர் (இதற்காக அவர், “Jaffna Rail Road – from Colombo to Jaffna – Railway to the Moon” என பலராலும் எள்ளி நகையாடப்பட்டவர்)
4. சைவனாக இருந்த போதும் புத்த கோவில் சட்டத்தைக் (Budhist Temporalities Ordinance) கொண்டு வந்தவர்.
5. திராவிடச் சிற்பக் கலை விளங்க, கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தை கருங்கல் கட்டடமாக்க உதவியவர்.
6. தமிழ்நாட்டிலுள்ள கொடைக்கானலில் 25 ஏக்கர் பரப்பளவு காணியில் ஒரு சிவாலயத்தை நிறுவியவர்.
7. இலங்கைப் பல்கலைக்கழகத்தை நிறுவியவர்களில் இவரும் ஒருவர்.
8. யாழ்ப்பாணத்தில் ஆண்களுக்காக பரமேஸ்வரா கல்லூரியையும், பெண்களுக்காக இராமநாதன் கல்லூரியையும் நிறுவியவர்.
9. கிளிநொச்சி இரண்டாம் வாய்க்கால் பகுதியில் ஆயிரம் ஏக்கரில் விவசாயப் பண்ணை ஒன்றை நிறுவியவர். (இவரது கமத்துக்காகத்தான் இரணைமடு குளம் கட்டப்பட்டதாகவும் கூறப்படுவதுண்டு)
10. 1884இல் கிறிஸ்தவ சமயப் பாடசாலைகளில் பெற்றோரின் விருப்பமின்றி ஏனைய சமயத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு கிறிஸ்தவ மதத்தைப் போதிப்பதில்லை என்றும், மனச்சாட்சி விதியினை நடைமுறைப்படுத்தி சமய சகிப்புத்தன்மையுள்ள கல்வியை வழங்கும் சூழலை கிறிஸ்தவ பாடசாலைகள் மேற்கொள்ள அரசு ஆவன செய்ய வேண்டும் எனவும், சட்ட நிரூபணசபையில் வேண்டுகோள் விடுத்தார்.
11. பௌத்த சங்க கல்விச் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கிய இராமநாதன், அதேவேளையில் சைவ பரிபாலன சபையின் செயற்பாடுகளுக்கும் ஊக்கமளித்தார்.
12. பெண் கல்விக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தவர். 1926இல் சைவப் பெண்கள் ஆசிரிய கலாசாலையை நிறுவினார்.
13. ஆரம்பகாலத்தில் யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளுக்கு அரச மானியம் வழங்கப்படாத காலத்தில் சுமார் 20 பாடசாலைகளுக்குத் தனது சொந்தப் பணத்தைக் கொடுத்து உதவினார்.
14. தனது சொத்துகள் முழுவதையும் தன்னால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளின் தேவைகளுக்காக எழுதி வைத்துள்ளார்.

இவ்வளவு பெரும் சேவைகளை இராமநாதன் ஆற்றிய போதும், அவர் சார்ந்திருந்த யாழ்.மேட்டுக்குழாம் நிலப்பிரபுத்துவ சிந்தனை காரணமாக, இலங்கை அரசமைப்புக்கு பிரித்தானியர் கொண்டு வந்த டொனமூர்

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...


படிப்பகம்

www.padippakam.com

# வியட்நாம் தேசபிதா ஹோ சி மின் அவர்களுக்கு கொழும்பில் உருவச் சிலை திறப்பு!

20ஆம் நூற்றாண்டில் உலகின் மிகச் சக்திவாய்ந்த ஏகாதிபத்திய வல்லரசுகளாக திகழ்ந்த பிரான்ஸ், அமெரிக்கா என்பன தனது நாட்டில் மேற்கொண்ட ஆக்கிரமிப்புகளைத் தோற்கடித்து, தமது தாய்நாடான வியட்நாமின் தேசிய விடுதலையை வென்றெடுத்த மாபெரும் புரட்சிகரத் தலைவர் ஹோ சி மின் அவர்களைக் கௌரவிக்கும் முகமாகவும், இலங்கை - வியட்நாம் நட்புறவின் சின்னமாகவும், அவரது உருவச் சிலையொன்று கொழும்பு பொதுநூலக வளாகத்தில் 2013 நொவெம்பர் 26ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலையைச் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அங்கு உரையாற்றுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

“இந்தோ - சீனப் பிராந்தியத்தில் உலகின் வல்லமை வாய்ந்த ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் ஹோ சி மின் அவர்கள் ஒரு மாபெரும் சக்திமிக்க தலைவராகத் திகழ்ந்தார். அத்தகைய ஒருவருடைய சிலையைத் திறந்து வைப்பது சரித்திரபூர்வமாகவும், காலகட்ட ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும். அதற்காக நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.



தோழர் ஹோ சி மின்

இலங்கையும் வியட்நாமும் வரலாற்றுக் காலகட்டம் முதல் பாரம்பரிய நட்புறவைக் கொண்ட நாடுகளாகும். இருநாட்டு மக்களுமே ஆழமான சுதந்திர உணர்வு மிக்கவர்கள். யாருக்கும் அடிமைப்பட்டு வாழ விரும்பாதவர்கள். அந்த உறுதிப்பாடு காரணமாகத்தான் வியட்நாம் மக்கள் தமது சுதந்திரத்தை வென்றெடுக்க முடிந்தது.

இலங்கை மக்களும் வரலாற்றில் பல தடவைகள் அந்நிய ஆக்கிரமிப்புகளை எதிர்த்துப் போராடி முறியடித்து, தமது சுதந்திரத்தைப் பாதுகாத்து வந்துள்ளார்கள். 1918இல் கண்டியிலும், பின்னர் மாத்தளையிலும் இலங்கை மக்களால் அந்நியர்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட கிளர்ச்சிகள் அத்தகையனவே. இவை வரலாற்றில் சரித்திரச் சான்றுகளாகப் பதியப்பட்டுள்ளன. அவ்வாறான ஒன்றே அந்நிய சக்திகளால் தூண்டப்பட்ட புலிகள் இயக்கத்தை 2009இல் முறியடித்து நாம் வெற்றிவாகை சூடிய சம்பவமுமாகும்.

இலங்கையர்களான நாம் எப்பொழுதும் வியட்நாம் மக்களின் அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்களை உறுதியுடன் ஆதரித்து வந்துள்ளோம். வருங்காலத்திலும் எமது இருதரப்பு ஒத்துழைப்பு மேலும் மேலும் வலுப்பெற்று வளரும் என்பதில் சந்தேகமில்லை.

1970இல் நான் முதன்முறையாகப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட போது, எமது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறீமாவோ பண்டாரநாயக்க அம்மையார், எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வியட்நாம் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்திருந்தார். நான் அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய கன்னி உரையில், வடக்கு தெற்காகப் பிரிந்திருந்த வியட்நாமின் இரு பகுதிகளும் விரைவில் ஒன்றிணைய வேண்டும் என வாழ்த்து தெரிவித்தேன். அவ்வாறே 1975இல் இரு பகுதிகளும் ஒன்றிணைந்தன.

**கொழும்பிலிருந்து அகில்**

தலைவர் ஹோசிமின் 3 தடவைகள் இலங்கைக்கு வந்து போனதாக அறிகின்றோம். இந்தத் தகவலை காலஞ்சென்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க அவர்கள் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடைபெற்ற ஒரு தொழிலாளர் மாநாட்டுக்குச் சென்றிருந்த வேளையில், அதில் கலந்துகொண்ட ஹோ சி மின் அவர்களே தன்னிடம் குறிப்பிட்டதாக என்னிடம் சொன்னார். அதற்காக நாம் பெருமைப்படுகிறோம்”.

இவ்வாறு ஜனாதிபதி ராஜபக்ச குறிப்பிட்டார்.

இந்த வைபவத்தில் கலந்து கொள்வதற்காக வியட்நாமிலிருந்து வந்த விசேட தூதுக்குழுவிற்கு தலைமைதாங்கி வந்த வியட்நாமிய பிரதிப் பிரதமர் பாம் பின் மிங் அவர்கள் உரையாற்றுகையில்,

“வியட்நாமும் இலங்கையும் பல நூற்றாண்டுகளாக சிறப்பான கலாச்சாரப் பிணைப்பையும் நட்புறவையும் கொண்ட நாடுகளாகும். இரண்டு நாடுகளும் அந்நிய ஆக்கிரமிப்புகளுக்கு எதராகப் போராடி வெற்றியீட்டிய நாடுகளும். வியட்நாம் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் போது, இலங்கை மக்கள் வழங்கிய தன்னலமில்லாத ஆதரவுக்காக நாம் என்றும் உங்களுக்குக் கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கை சுமார் 30 வருட காலமாக தனது நாட்டில் நிலவிய பயங்கரவாதத்திற்கும்,

www.padippakam.com

பிரிவினைவாதத்திற்கும் 2009இல் வெற்றிகரமாக முடிவு கட்டியுள்ளது. இது பல உலக நாடுகளுக்கு முன்னுதாரணமாகும். இருந்தும் சில அந்நிய சக்திகள் மீண்டும் இலங்கையில் தலையிட்டு குழப்பங்களை உருவாக்க முயல்கின்றன. அவை ஒருபோதும் வெற்றிபெறாது. இலங்கை பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டிய பின்னர் துரிதமான பொருளாதார அபிவிருத்தி கண்டு வருவது எமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது. இலங்கைக்கு மிகச் சிறப்பானதொரு எதிர்காலம் உள்ளது" என்றார்.

இந்நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உயரதிகாரிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் உட்படப் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். வழமையாக இப்படியான நிகழ்வுகளில் தமிழ் தலைவர்கள் கலந்து கொள்வதில்லை எனினும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் இதில் கலந்து கொண்டார்.

**குறிப்பு:**

ஹோ சி மின் பெரும்பாலும் முதல் தடவை கொழும்புக்கு வந்தது ஒரு பிரெஞ்சு கப்பலில் என்று கூறப்படுகின்றது. வியட்நாமை பிரான்ஸ் ஆக்கிரமித்த பின்னர், அப்பொழுது இளைஞராக இருந்த ஹோ ஒரு பிரெஞ்சு கப்பலில் சமையல்காரராகச் சேர்ந்து கொண்டார். அந்தக் கப்பல் அடிக்கடி பிரான்ஸ் சென்று வந்தபோது, அவரும் அதில் போய்வந்தார். அவ்வாறு போய்வந்த நேரத்தில்தான் அவருக்கு பிரான்ஸ் சோசலிஸ்ட்டுகளுடன் தொடர்பு ஏற்பட்டதாகவும், அதன் மூலமே அவர் பிரெஞ்சு காலனியாதிக்கத்தை எதிர்த்துப் போராடும் கருத்தை உருவாக்கிக் கொண்டார் எனவும் சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

அவர் வேலை செய்த கப்பல் ஒருமுறை கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டு நின்ற பொழுது, கொழும்பைச் சுற்றிப் பார்க்க வெளியே வந்த ஹோ சி மின், அன்றைய இரவை கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு முன்னால் உள்ள மிகப் பழமை வாய்ந்த 'கொலனியல் ஹோட்டலில்' (Colonial Hotel) கழித்தார் என்று கூறப்படுகிறது. *

5ம் பக்கத்தொடர்ச்சி...

ஆணைக்குழு பரிந்துரைகளை எதிர்த்தார். அத்துடன் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியதையும் எதிர்த்தார்.

எது எப்படியிருப்பினும், இன்றுள்ள தமிழ் தலைமைகள் போல், தமது வர்க்கம் சார்ந்த சிங்கள பிற்போக்குத் தலைமைகளுடன் கூடிக்குலாவிக் கொண்டு, மறுபக்கத்தில் தமது சுயநல அரசியல் தேவைகளுக்காக சாதாரண மக்கள் மத்தியில் இனவாதம் பேசி, அதன்மூலம் பாராளுமன்றம் சென்று சுகபோகம் காணும் இரட்டை வாழ்க்கையை இராமநாதன் மேற்கொள்ளவில்லை.

அதனால்தான், சிங்களத் தலைவர்கள் சம்பிரதாயத்துக்காகத் தன்னும், வருடமொருமுறை பாராளுமன்ற வளாகத்திற்குள் உள்ள அவரது உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தாலும், தமிழ் தலைமைகள் அவரை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. *

# திரிகோணமலையில் மிகத் தொன்மையான துறைமுகத்தின் எச்சசொச்சங்கள் கண்டு பிடிப்பு!

இலங்கை தொல்லியல் திணைக்களம் தனது கள ஆய்வுகளின் போது கிறிஸ்துவுக்கு 800 ஆண்டுகள் பிந்திய புராதன துறைமுகம் ஒன்றை திரிகோணமலை மாவட்டத்திலுள்ள சேருவில என்ற இடத்தில் கண்டுபிடித்துள்ளது. இந்தக் கண்டுபிடிப்பு சம்பந்தமாக கருத்துத் தெரிவித்த களனியிலுள்ள தொல்லியல் பட்டப்பிடிப்பு நிறுவனத்தின் தலைவர் கலாநிதி தான்திலகே புராதன செப்பு தாது உலோகங்கள் பற்றி கள ஆய்வு செய்தபோது சேருவிலவில் இருந்த புராதன சர்வதேசத் துறைமுகத்தின் தடயங்களைக் கண்டுபிடித்ததாகக் கூறினார்.

"நாங்கள் இந்த இடத்தில் துறைமுகம் ஒன்று இயங்கியதற்கான பெரிய நீர்த்தேக்கத்தையும், சிதைவடைந்த கல் தூண்களையும் கண்டு பிடித்தோம்" என அவர் கூறியுள்ளார்.

இந்தத் துறைமுகம் அமைந்திருந்த பகுதியை அண்டிய பகுதிகளில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் Zero AD Era (கி.பி. 1வது நூற்றாண்டு) முந்தைய காலத்து செப்புத் தயாரிப்புகள் எனத் தெரிய வந்தன என அவர் கூறினார். மேலும் அவர் கூறுகையில், "அத்துடன் அங்கே நாம் சீனப் பீங்கான்களையும், வெளிநாட்டு கண்ணாடிகளையும், கண்ணாடி மணிகளையும் கண்டு பிடித்துள்ளோம். அவை அந்த நேரத்தில் அங்கு நடைபெற்ற வர்த்தகத்தைச் சுட்டிக்காட்டுவனவாக உள்ளன" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு கண்டு பிடிக்கப்பட்ட செப்பை ஆராய்ந்த பொழுது அவை அதே காலத்தை சேர்ந்தவை எனத் தெரிய வருவதாகக் கூறும் அவர், "சில வேளைகளில் இந்த செப்பு அந்த நேரத்தில் ஆயுதங்களையும், உருவச் சிலைகளையும் செய்யப் பயன்பட்டிருக்கலாம்" எனவும் கூறுகின்றார். அத்துடன் அந்தப் பகுதியிலுள்ள வேரகல (Weragala) மற்றும் அபேயகிரி (Abhayagiri) ஸ்தூபிகள் அதே காலகட்டத்தைச் சேர்ந்தவை என்றும், இந்தச் செப்பு உலோகங்கள் அவற்றினுடையதாக இருக்கலாமெனவும் கருத்து வெளியிட்டார்.

கலாநிதி தாந்திலகே மேலும் கூறுகையில், செப்பு, அதுவும் செப்பு காந்தம் என்பது, பூகோள ரீதியாக உள்நாட்டிலும், பிராந்திய ரீதியிலும் மிக முக்கியமானது என்றும், தென்னிந்தியாவில் மத்தியகாலப் பகுதியில் உலோகங்கள் எதுவும் இருக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

அந்தப் பகுதியிலுள்ள உலோகங்களை முழுமையாக ஆய்வு செய்வதானால், மிகவும் முன்னேறிய தொழில்நுட்ப முறைகள் அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். *


படிப்பகம்

www.padippakam.com

‘வானவில்’ நோக்கி வந்த கடிதம்:

# யாழ்ப்பாணத்தில் இப்படியும் வைத்திய ‘சேவை’ நடைபெறுகின்றது!

அன்புடையீர்,

நீண்டகாலமாக வெளிநாட்டில் வாழ்கின்ற நான் எனது ஊரில் உள்ள கோயில் ஒன்றில் நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதற்காக தை மாதம் யாழ்ப்பாணம் சென்று வந்தேன்.

அங்கு போவதற்கு முன்னர் அங்கு போவது பற்றி கொஞ்சம் தயக்கமாகத்தான் இருந்தது. ஏனெனில் அங்கு போய் வந்தவர்கள் ஒரு விதமாகவும், போகாதவர்கள் வேறு விதமாகவும் சொன்னதால், முதலில் போவதற்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. அதற்குக் காரணம் கொழும்பு எயர்போட்டில் இறங்கினவுடனேயே சி.ஐ.டி பிடிக்கும் என அங்கு போகாதவர்கள் சிலர் எனக்குப் பயங்காட்டி இருந்தனர்.

நான் எந்தவிதமான அரசியல் ஈடுபாடும் இல்லாதவன் என்றபடியால் ஒரு துணிவுடன் புறப்பட்டேன். இங்குள்ளவர்கள் பயங்காட்டியபடி அங்கு எனக்கு எனந்தவிதமான பிரச்சினையும் இருக்கவில்லை. கொழும்பு எயர்போட்டில் இறங்கி யாழ்ப்பாணம் வரை எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் போய்ச் சேர்ந்தேன். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போகும் றோட் அந்தமாதிரி இருக்கின்றது. தண்ணீரில் படகு போவதுபோல வாகனங்கள் வழுக்கிக்கொண்டு போகின்றன.

யாழ்ப்பாண நகரம் புதுப்புதுக் கட்டிடங்களுடன் வடிவாக இருக்கின்றது. எங்கு பார்த்தாலும் சனக்கூட்டம்தான். வாகன நெரிசலும் அதிகம். சனங்கள் முன்னைய காலங்களைவிட வசதியாக இருப்பது போலத் தெரிகிறது.

தீவகத்திலுள்ள எனது ஊரிலும் பலர் புதுவீடுகள் கட்டியுள்ளனர். றோட்டுக்கும் வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கியிருக்கிறார்கள். அநேகமான வீடுகளில் ரி.வி, பிறிட்ச், கொம்பியூற்றர் இருக்கின்றன. ஒவ்வொரு ஊரிலும் ஒருசிலராவது கார், ஓட்டோ வைத்திருக்கின்றனர். ஓட்டோ பயணம் சர்வசாதாரணம். மோட்டார் சைக்கிள் இல்லாத வீடுகள் இல்லை எனலாம். பெண்பிள்ளைகளும் சர்வசாதாரணமாக ஓடுகிறார்கள். ஆனால் முன்பு நாங்கள் ஓடித்திரிந்த சைக்கிள்தான் அருகிக்கொண்டு வருகிறன. எல்லாம் காலத்தின் கோலம்.

இனி முக்கியமான விசயத்துக்கு வருகின்றேன். நான் ஊரில் நிற்கையில் வெறுங்காலுடன் கடற்கரைக்கு நடந்து போனபோது தடி ஒன்று காலில் குத்திவிட்டது. அது ஏற்பாக்கிவிடும் என்று சிலர் பயப்படுத்தி ஆஸ்பத்திரிக்குப் போகும்படி கூறினர். வேலணையிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரி சரியில்லை என்றும், யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குப் போகும்படியும் கூறினர். வேறு சிலர் பெரியாஸ்பத்திரியும் சரியில்லை என்றும், தின்னவேலியிலுள்ள (திருநெல்வேலி – வானவில்)) தனியார் ஆஸ்பத்திரிக்குப் போவதே நல்லது என்று கூறினர்.




என்ன செய்வது என்ற குழப்பத்துக்கு மத்தியில் ஒரு ஓட்டோவைப் பிடித்துக்கொண்டு, துணைக்கு ஒருவரையும் அழைத்துக்கொண்டு தின்னவேலியிலுள்ள தனியார் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். அங்கு என்னை அவர்கள் வார்ட்டில் அனுமதித்து மூன்று நாட்கள் சிகிச்சை வழங்கினர். மூன்று நாள் சிகிச்சைக்கும் செலவு எவ்வளவு தெரியுமா? அறுபதினாயிரம் (60,000) ரூபா! நம்பினால் நம்புங்கள் இது உண்மை. நான் திரும்பிவர வேண்டியிருந்ததால், சரியாக புண் ஆறுவதற்கு முன்னரே டிக்கட் வெட்டிக்கொண்டு புறப்பட்டு விட்டேன். அவர்களுக்கு இன்னும் கொஞ்சநாள் என்னை அங்கே வைத்திருந்து பணம் கறக்க விருப்பம். ஆனால் நான் அவர்களுக்குப் பிடிகொடாமல் புறப்பட்டுவிட்டேன்.

இவ்வளவிற்கும் அந்த ஆஸ்பத்திரியில் போதிய அடிப்படை வசதிகள்கூட இல்லை. அங்கு நோயாளிகளுக்கு உணவுகள் வழங்கப்படுவதில்லை. ஆஸ்பத்திரியில் உணவகம் கூட இல்லை. வெளியே உள்ள கடையில்தான் வாங்க வேண்டும். கழுவும் அறையில் சோப்போ, கை துடைக்க துவாயோ இல்லை. அதுபற்றி அங்கு வேலை செய்யும் ஒருவரிடம் கேட்டபோது, அவற்றை நோயாளிகள்தான் கொண்டுவர வேண்டும் என்று கூறினார். சில வேளைகளில் தண்ணீரும் வராது.

இவற்றைவிட இன்னொரு கொடுமை என்னவென்றால், அங்கு பல இளம் பெண் பிள்ளைகள் யூனிபோம் போட்டுக்கொண்டு நேர்ஸ் வேலை செய்யுதுகள். அவர்களிடம் பயிற்சிக்காலம் என்று சொல்லி ஆறுமாதம் வேலை வாங்குகிறார்கள். இந்த ஆறுமாதமும் அவர்களுக்கு சம்பளம் வழங்குவதில்லை. அவர்களின் சொந்த செலவிலேயே வந்து செல்கிறார்கள். ஆறுமாதத்தால் நிரந்தர வேலை தருவார்கள் என்ற எதிர்பார்ப்பில் அதுகள் பல்லைக் கடித்துக்கொண்டு வேலை செய்தால், ஆறுமாதம் முடிந்ததும் அதுகளை நிற்பாட்டிப்போட்டு, வேறு பிள்ளைகளை பயிற்சி என்று சொல்லி சேர்த்துக் கொள்ளுவார்கள். பிறகு அவர்களுக்கும் ஆறுமாதத்திலை அதே சீட்டுக் கிழிப்புத்தான்!

இந்த ஆஸ்பத்திரியிலுள்ள ஒரு பெரிய டொக்டர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலை வேலை பார்த்து அரசாங்க சம்பளமும், வசதிகளும் அனுபவித்துக்கொண்டு, இங்கும் வேலை பார்த்து மேலதிகமாக உழைக்கிறார். அப்படி அவர் உழைப்பதற்கு இலங்கையிலை தடை இல்லை. ஆனால் அவர் என்ன செய்கிறார் என்றால், இங்கு வரும் சில நோயாளிகளின் சில சிகிச்சைகளை யாழ்.பெரியாஸ்பத்திரியில் செய்துகொண்டு, அதற்கான பணத்தை இங்கு வசூலிக்க ஏற்பாடு செய்கிறார்.

இந்தத் தகவல்கள் எல்லாம் நான் அங்கு இருந்த 3 நாட்களில் கண்டு கேட்டு அறிந்தவை. உண்மையில் நான் எனது காயத்திற்கு எனது ஊரிலுள்ள ஆஸ்பத்திரியிலேயே வைத்தியம் செய்து

தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க...


படிப்பகம்

www.padippakam.com

# 10 வருடங்களாக உண்ணாவிரதம் இருந்து வரும் இந்தியாவின் மணிப்பூர் மாநிலப் பெண்மணி!



இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களில் ஒன்றான மணிப்பூரைச் சேர்ந்த இரோம் சர்மிளா (Irom Sharmila) என்ற பெண்மணி இந்திய அரசாங்கத்திடம் சில கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 10 ஆண்டுகளாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார். அதனால் அவரது உடல் உறுப்புகள் பல செயலிழந்து போய்விட்ட போதிலும், தனது கோரிக்கை நிறைவேறும்வரை தனது உண்ணாவிரதத்தைக் கைவிட மறுத்து வருகிறார் இந்த 'இரும்புப் பெண்மணி'.

அவரது ஒரே கோரிக்கை இந்திய அரசால் மணிப்பூரில் கடந்த பல ஆண்டுகளாக அமுல்படுத்தப்பட்டு வரும் 'ஆயுதப்படை சிறப்புச் சட்டத்தை' நீக்க வேண்டும் என்பதுதான். இந்திய அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் இந்தச் சட்டம் காரணமாக மணிப்பூர் மாநில மக்களின் அன்றாட வாழ்க்கை சின்னாபின்னப்படுத்தப்பட்டுள்ளது என்பதுதான் அவரது கோரிக்கைக்குக் காரணம்.

அந்தச் சட்டத்தின்படி, இந்திய இராணுவம் எவருடைய வீட்டுக்குள்ளும் அனுமதியின்றி எந்த நேரமும் நுழைந்து சோதனை போட முடியும் என்பதுடன், யாரையும் இழுத்தும் செல்லலாம். யாரையாவது சுட்டுக் கொன்றால், அதுபற்றி எந்த விசாரணையும் செய்ய முடியாது. இந்தச் சட்டத்தை கைகளில் வைத்துக்கொண்டு, இந்திய இராணுவம் மணிப்பூர் மக்கள் மீது நடாத்தும் அட்டூழியங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

ஒருமுறை பேருந்துக்காகக் காத்திருந்த 10 பேரை இராணுவம் துடிக்கப் பதைக்க சுட்டுக் கொன்றதை இரோம் சர்மிளா நேரில் பார்த்த பிறகுதான், அரசாங்கத்தின் அந்தப் பயங்கரச் சட்டத்தை நீக்கக்கோரி அவர் இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

மணிப்பூர் மக்களைப் பொறுத்தவரை, இந்தியாவின் ஏனைய வட கிழக்கு மாநிலங்களைப் போல மிகுந்த போராட்ட பாரம்பரியம் உள்ளவர்கள். அவர்கள் ஆரம்பத்தில் மன்னராட்சியை எதிர்த்துப் போரிட்டது போலவே, பின்னர் இந்திய பெரு முதலாளித்துவ எதேச்சாதிகார அரசின் கொடுமைகளையும் எதிர்த்து நீண்டகாலமாகப் போராடி வருகின்றனர். இந்திய மத்திய அரசிடமிருந்து அதிகளவான சுயாட்சி கோரி ஆயுதம் தாங்கிய போராட்டத்தையும் அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். 'மணிப்பூர் மக்கள் விடுதலைப் படை' என்ற அமைப்பு அதற்குத் தலைமைதாங்குகிறது.

மணிப்பூரின் இன்னொரு மகிமை, இந்தப் போராட்டங்களுக்கெல்லாம் பெரும்பாலும் பெண்களே தலைமை வகித்து வந்துள்ளனர். அந்த மரபில் தற்போதைய இரோம் சர்மிளாவின் உண்ணா நோன்புப் போராட்டமும் அமைந்துள்ளது. ஆனால் 10 வருடங்களாக அவர் உண்ணா நோன்பை மேற்கொண்டிருந்தாலும், இந்திய அரசு அவரது கோரிக்கையை பிடிவாதமாக ஏற்க மறுத்து வருகிறது.

இரோம் சர்மிளாவின் போராட்டத்தையும், மணிப்பூர் மக்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், பழக்க வழக்கங்கள் என்பவற்றையும் அடிப்படையாக வைத்து, மலையாள மொழியில் 'இரோம் சர்மிளா' என்ற பெயரில் பி.சிறீராஜ் என்பவர் சிறந்த நூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார். அந்த நூல் தற்போது தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டு, பொள்ளாச்சியிலுள்ள 'எதிர்' பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

**– திருப்பதி**

8ம் பக்கத்தொடர்ச்சி...

குணமாக்கியிருக்கலாம். சிலரது சொல்லைக் கேட்டு அநியாயமாக இவ்வளவு பணத்தையும் கொட்டிவிட்டு வந்தேன்.

இலங்கையைப் பொறுத்தவரையில் நாங்கள் அங்கு இருந்த காலத்திலும் சரி, இன்றும் சரி, அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நல்ல முறையில் இலவசமாக சிகிச்சை வழங்குகிறார்கள். அதுவும் யுத்தம் முடிந்த பிறகு அரசாங்கம் யாழ்ப்பாணத்திலுள்ள எல்லா ஆஸ்பத்திரிகளுக்கும் புதிய கட்டிடங்கள் கட்டிக்கொடுத்து, டொக்டர்களையும் நியமித்து, போதிய மருத்துவ வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது.

எனவே வெளிநாட்டிலிருந்து போகிறவர்கள் அங்கு ஏதாவது நோய் வந்தால் முதலில் அரசாங்க ஆஸ்பத்திரிக்குச் செல்லுங்கள். அங்கு செலவில்லாமல் நல்ல சிகிச்சையைப் பெற முடியும். அப்படிச் சரிவராவிட்டால், கொழும்பு, கண்டி போன்ற இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிக்குப் போகலாமேயொழிய, யாழ்ப்பாணத்திலுள்ள போலி ஆஸ்பத்திரிக்குப் போய் ஏமாந்து விடாதீர்கள்.

இது எனது அனுபவம். நான் பெற்ற அனுபவத்தை வானவில்லின் ஊடாக உங்களுடன் பகிர்ந்து கொள்ளவே இவ்வளவத்தையும் இங்கு எழுதியுள்ளேன்.

நன்றி
தங்கள் உண்மையுள்ள
**க.தர்பனானந்தன்**


படிப்பகம்

www.padippakam.com

# மலையாள(அ)த்தானும் தமிழக(அ)த்தானும்!



M.T.Vasudevan Nair

மலையாள நாவலாசிரியர்களில் எம்.டி.வாசுதேவன் நாயர் குறிப்பிடத்தக்க ஒருவர். அவர் எழுதிய நாவல்களில் 'நாலுகட்டு' என்ற நாவல் மிகப்பிரபலமானது. சாகித்திய அக்டமி பரிசு பெற்ற அந்த நாவல் ஒரு நிலப்பிரபுத்துவக் குடும்பத்தின் சிதைவை மிகவும் எளிமையாகவும், அதேவேளையில் அழகாகவும் சித்தரிக்கிறது. இந்த நாவல் 28 பதிப்புகளைக் கண்டு சுமார் 3 இலட்சம் பிரதிகள் விற்றுள்ளது! தற்பொழுது தமிழிலும் 'கவிதா பப்ளிக்கேசன்' வெளியீடாக வந்துள்ளது.

தமிழ்நாட்டின் 7 கோடி சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்தளவு சனத்தொகை கொண்ட கேரளாவில் அவரது நாவல் இவ்வளவு பிரதிகள் விற்றது என்பது, மளையாள மக்களின் தர மேன்மையைத்தான் எடுத்துக் காட்டுகிறது. சினிமா மாயையில் சீரழிந்து கிடக்கும் தமிழகத்தில் எந்தவொரு கொம்பனின் நூலும் இவ்வளவு பிரதிகள் விற்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

வாசுதேவன் நாயர் நாவலாசிரியர் மட்டுமல்ல. அவர் ஒரு சினிமா ஆசிரியர், பத்திரிகை ஆசரியர், பள்ளிக்கூட ஆசிரியர் என பன்முக ஆளுமையும், மேதைமையும் கொண்டவர். 'பத்மபூசண்' விருதும் பெற்றுள்ளார்.

தமிழன் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் தோன்றியவன், தமிழ் மொழி இந்தியாவிலேயே பழமை வாய்ந்தது, தமிழ்க் கலாச்சாரம் மிகவும் தொன்மை வாய்ந்தது என எம்மவர்கள் பீற்றிக் கொள்வதுடன், ஏனைய தென்னிந்திய மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு என்பன தமிழை இரவல் வாங்கிய மொழிகள் எனச் சொட்டை சொல்வதும் உண்டு. ஆனால் இன்று அந்த மொழிகளில் வெளிவரும் இலக்கியங்கள், சினிமா, நாடகம் என்பனவற்றுக்கு அருகில் போவதற்கே தமிழ் கலாச்சாரம்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

# இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் வழங்குவதற்கு கர்நாடக தலித் அமைப்பு எதிர்ப்பு!

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் சுல்லியா (Sullia), புத்தூர் (Puttur) பகுதிகளில் வாழ்கின்ற இலங்கையின் மலையகப் பகுதிகளில் இருந்து தாயகம் திரும்பிய இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு 'பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கான' (Scheduled Caste) சான்றிதழ் வழங்குவதற்கு அம்மாநில அரசு ஆலோசித்து வருவதற்கு அங்குள்ள தலித் அமைப்பு ஒன்று (The Dakshina Kannada Zilla Dalita Sanghatanegala Okkuta) எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

1964இல் இலங்கை – இந்திய நாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட சிறீமாவோ – சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழும், 1974இல் செய்து கொள்ளப்பட்ட சிறீமாவோ – இந்திராகாந்தி ஒப்பந்தத்தின் கீழும் இந்தியக் குடியுரிமை பெற்று தாயகம் திரும்பிய இலங்கையின் மலையகத் தோட்டத் தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் கர்நாடக மாநிலத்தின் மேற்குறித்த தாலுக்காக்களில் உள்ள இறப்பர் தோட்டங்களில் தொழில் புரிந்து வருகின்றனர்.

அந்த மக்களுக்கே பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் வழங்குவது சம்பந்தமாக கர்நாடக மாநில அமைச்சரவை ஆராய்ந்திருந்தது. அதையொட்டியே மேற்கூறிய கர்நாடக தலித் அமைப்பு தனது எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறது. தமது எதிர்ப்பு சம்பந்தமாக கருத்து வெளியிட்ட அவ்வமைப்பின் முக்கியஸ்தரான சி.எச். பாஸ்கர் என்பவர், கர்நாடக அரசு இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு பிற்படுத்தப்பட்ட சான்றிதழ் வழங்குமாக இருந்தால், அது பிற்படுத்தப்பட்டோரை அடையாளம் காண்பது சம்பந்தமாக 1990இல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக அமையும் எனக் கூறியுள்ளார்.

1950இல் இந்தியக் குடியரசுத் தலைவர் விடுத்த ஒரு அறிவித்தலின் பிரகாரம், அந்தத் திகதியிலிருந்து இந்தியாவில் குடியிருப்போருக்கே பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் வழங்க முடியும் என நீதிமன்றம் அத்தீர்ப்பில் தெரிவித்திருந்தது. அதன்படி 1964, 1974ஆம் ஆண்டுகளின் பின்னர் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் வழங்க முடியாது என அந்தக் கர்நாடக தலித் சம்மேளனம் சுட்டிக் காட்டியுள்ளது.

அதை மீறி இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் வழங்கினால், அதைத் தொடர்ந்து இந்தியாவுக்குள் வந்து வாழ்கின்ற திபெத்தியர்கள், பங்களாதேசிகள், பர்மியர்கள் போன்றோரும் அந்தச் சலுகையைத் தமக்கும் வழங்கும்படி கோருவர் எனத் தெரிவிக்கும் கர்நாடகத் தலித் அமைப்பு, இதனால் பூர்வீகமாக அங்கு வாழும் தம்மைப் போன்றவர்களின் நலன்கள் பாதிக்கப்படும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளது.

*


படிப்பகம்

www.padippakam.com

# பிரித்தானியரிடமிருந்து தமது தாயக மண்ணை மீட்பதற்காக 25 வருடங்களாகப் போராடும் சாக்கோஸ்தீவு மக்கள்!

இந்து சமுத்திரத்திலுள்ள பவளப்பாறைகள் நிறைந்த பின்தங்கிய தீவான டியாகோ கார்சியாவில் (Diego Garcia) அமைந்துள்ள இரகசிய விமானத்தளம் அமெரிக்காவின் இராணுவ தந்திரோபாயத்துக்கு ஒரு நெருக்கடியாக கடந்த 25 வருடங்களாக இருந்து வருகின்றது. இது ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் மீது குண்டுவீச்சுத் தாக்குதல் நடாத்துவதற்கான ஏவுதல் தளமாக இருந்ததுடன், எதிர்காலத்தில் ஈரானிய அணுவாயுதக் கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடாத்துவதற்கான ஒன்றாகவும் இருக்கின்றது.

பென்ரகன் (Pentagon) இந்த முகாமை நீதிக்கும் சுதந்திரத்துக்குமான அடிச்சுவடு என அழைக்கின்றது. ஆனால் 1970களில் பிரிட்டிஸ் அதிகாரிகளினால் மிருகத்தனமான முறையில் வெளியேற்றப்பட்ட இதன் சொந்த மக்கள், தமது தாய்வீடான டியாகோ கார்சியாவுக்குத் திரும்பி வருவதற்கான தமது சொந்த நீதிக்கும் சதந்திரத்திற்குமாகப் போராடி வருகின்றனர். அடுத்த வருடம் (2014) அமெரிக்கக் குத்தகைக்கு பிரித்தானியாவின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முயற்சி முள்ளின் மேல் இருப்பது போல பென்ரகன் தரப்புக்கு மாறி வருகின்றது.

இந்தியாவிலிருந்து தெற்காக 1800 கிலோமீட்டர்கள் தென்னை மரங்கள் அடர்ந்த இந்த சிறிய சாகோஸ் தீவுகளில் (Chagos Islands) B-52 குண்டுவீச்சு விமானங்கள், மறைந்து தாக்கும் B-52 விமானங்கள் என்பனவற்றுக்கான இரண்டு பாரிய விமான ஓடுபாதைகளும், அத்துடன் கடற்படை, விமானப்படைகளுக்கான நூற்றுக்கணக்கான கட்டிடங்கள், கோல்ஃப் விளையாட்டு மைதானம், ரெனிஸ்கோட் போன்ற வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

தென்னந் தோட்டங்களில் வேலை செய்வதற்காக பல தலைமுறைகளுக்கு முன்னர் ஆபிரிக்காவிலிருந்து அடிமைகளாகக் கொண்டு வரப்பட்ட சாகோஸ்தீவு வாசிகள் தொடர்ந்தும் தமது பவளப்பாறைச் சொர்க்கத்துக்குச் செல்லவிடாது கடுமையாகத் தடுக்கப்பட்டு வருகின்றனர்.

தாம் வெளியேற்றப்பட்ட 40ஆவது ஆண்டை நினைவுகூரும் அவர்கள், பிரித்தானிய நீதிமன்றத்தில் இன்னொரு தோல்வியைச் சந்தித்த போதும், தொடர்ந்து போராடப் போவதாக வன்மத்துடன் சொல்லி வருகின்றனர்.

அண்மைய வருடங்களில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அவர்கள் வென்றெடுக்கும் கூட்டாளிகளின் தொகை அதிகரித்துள்ளது. அவர்களின் போராட்டத்தை ஆதரித்து வருபவர்களில் ஒருவரான தொழிற்கட்சியின் முன்னாள் பிரதிப் பிரதமரான ஜோன் பிரெஸ்கொற் (John Prescott) கூறுகையில்,




இத்தீவுவாசிகள் துன்பப்படுவதற்கான "மோசமான அநீதி" குறித்து தாம் வெட்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளார்ந்த பதிவேட்டுத் தகவல்களின்படி, இத்தீவுவாசிகளை பிரித்தானிய அதிகாரிகள் இழிவுகரமான புனைபெயர்களால் குறிப்பிடுவது தெரிய வந்துள்ளது. விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள ஒரு இராஜதந்திர கேபிளின்படி, 2009இல் ஒரு அமெரிக்க இராஜதந்திரியுடனான சந்திப்பின் போது, ஒரு மூத்த பிரித்தானிய அதிகாரி சாக்கோசியர்களை "Man Fridays" எனக் குறிப்பிட்டுள்ளார். 1966ஆம் ஆண்டின் பிரித்தானிய இராஜதந்திரக் குறிப்பொன்றில் இத்தீவிலுள்ள வாசிகளை "சில டாசான்கள் (Tarzans) அல்லது Man Fridays" என்று குறிப்பிட்டிருந்ததை அவர் எதிரொலித்துள்ளார்.

"நாங்கள் கடற்பறவைகளோ (Seagulls) அல்லது டார்சான்களோ அல்லது Man Fridays அல்ல" என்று கூறுகிறார் சாக்கோஸ் தீவுகளில் பிறந்து, நான்கு வயதாக இருக்கும் போது பெற்றோருடன் நாடு கடத்தப்பட்ட ஒலிவியர் பான்கோல்ற் (Olivier Bancoult).

மேலும் அவர், "எப்பொழுதும் மனித உரிமைகளின் காவலனாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் பிரித்தானிய அரசாங்கம், சாகோஸ் தீவுகளில் மனித குலத்திற்கு எதிரான குற்றத்தைப் புரிந்துள்ளது. ஏனெனில் நாம் அடிமைகளின் வழித்தோன்றல்கள் என்ற காரணத்தாலா?" எனக் கேள்வி எழுப்புகின்றார்.

www.padippakam.com

இந்தத் தீவுவாசிகளை பிரெஞ்சு காலனித்துவவாதிகள் 18ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஆபிரிக்காவிலிருந்து கொண்டு வந்தனர். பின்னர் நெப்போலியப் போர்களின் (Napoleonic Wars) பின்னர் பிரித்தானியர் மொறிசியஸ்சைக் (Mauritius) கைப்பற்றிய போது இவர்கள் பிரித்தானியாவின் பிடியில் விழுந்தனர். 1960களின் நடுப்பகுதியில் இத்தீவில் பாரிய அமெரிக்க தளம் ஒன்றை நிறுவுவதற்காக டியாகோ கார்சியாவைப் பயன்படுத்துவதற்கான இரகசிய உடன்படிக்கை ஒன்றை பிரித்தானிய - அமெரிக்க அரசாங்கங்கள் செய்தபோது, சாகோஸ் தீபகற்பத்தில் வாழ்ந்த மக்கள் தொகை சுமார் 2000 பேர் வரை இருக்கும்.

அந்த உடன்படிக்கையின்படி 1968இல் சுதந்திரமடைந்த மொறிசியஸ்சிடமிருந்து சாகோஸ் தீவுகள் எதுவித பிரச்சினைகளுமின்றி எடுத்துக் கொள்ளப்பட்டது. அவர்கள் தொடர்ந்தும் பிரித்தானிய எல்லைக்குட்பட்டவர்களாகவே இருந்ததுடன், ஒரு உடன்படிக்கையின் மூலம் டியாகோகார்சியா அமெரிக்காவுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது. அதற்குப் பிரதியுபகாரமாக பிரித்தானியா கொள்வனவு செய்த பொலறிஸ் அணுவாயுத ஏவுகணைகளுக்கு (Polaris Nuclear Missiles) 14 மில்லியன் டொலர்கள் விலைக்கழிவு வழங்கப்பட்டது.

அடுத்த சில வருடங்களில் தீவுகளுக்கான விநியோகங்கள் படிப்படியாக நிறுத்தப்பட்டதுடன், தீவுகளை விட்டு வெளியேறிய சாக்கோசியர்கள் எவரும் திரும்பி உள்ளே வரமுடியாதபடி தடுக்கப்பட்டனர். அந்த மக்களின் நூற்றுக்கணக்கான வளர்ப்பு நாய்கள் சுற்றி வளைத்து பிடிக்கப்பட்டு விசவாயு செலுத்திக் கொல்லப்பட்டன. அதன்பின்னர் எஞ்சியிருந்த தீவுவாசிகள் அனைவரும் பலவந்தமாக சரக்குக் கப்பல்களில் நெருக்கியடித்து ஏற்றப்பட்டனர். 5 நாட்கள் பயணத்தின் பின்னர் பெரும்பாலோர் தெற்குப் பக்கமாக 2000 கிலோமீட்டர்கள் தூரத்திலிருந்த மொறிசியஸ்சில் வறுமையில் விடப்பட்டனர். சிலருக்கு மட்டும் சில ஆயிரம் டொலர்கள் நஸ்டஈடாக வழங்கப்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக சாக்கோசியர்கள் திரும்பி வருவதைத் தாம் விரும்பவில்லை என அமெரிக்க இராணுவம் கூறுகின்ற போதிலும், இறுதி முடிவு அத்தீவுகளை இன்னமும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற பிரித்தானிய அரசாங்கத்திடமே இருக்கின்றது.

தற்பொழுது 76 வயது நிரம்பிய ரோஸ்மன்ட் சமினாடென் (Rosemond Saminaden) என்பவரும் 1973இல் இறுதியாக நாடு கடத்தப்பட்ட சாக்கோசியர்கள் குழுவில் ஒருவர். "இது ஒரு பெரிய இழப்பு" என அவர் கூறுகிறார். மேலும் அவர், "இது எங்களுக்கு மிகவும் துன்பமானது. அநீதியான முறையில் எமக்கு என்னமாதிரிச் செய்யப்பட்டுள்ளது. நாம் எமது போராட்டத்தைத் தொடர்வோம்" என்று கூறுகிறார்.

நாடு கடத்தப்பட்டவர்களில் 680 பேர் மட்டுமே இன்று உயிருடன் இருக்கின்றனர். "எல்லா சாக்கோசியர்களும் இறந்து போவதற்காக பிரித்தானிய அரசாங்கம் காத்துக் கொண்டிருக்கிறது" எனக் கூறுகிறார் சாக்கோஸ் அகதிகள் குழுவின் தலைவரான திரு. பான்கோல்ற்.

கடந்த 13 வருடங்களில் தமது நாட்டுக்குத் திரும்பிப் போவதற்கான தமது உரிமை சம்பந்தமான வழக்குகளில் இத்தீவுவாசிகள் பிரித்தானிய நீதிமன்றங்களில் தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற்றபோதிலும், அத்தீர்ப்புகளைப் பின்னர் பிரபுக்கள் சபை மாற்றிவிட்டுள்ளது. அவர்கள் தங்கள் வழக்கை ஹேக்கிலுள்ள (Hague) சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லவுள்ளதுடன், இத்தீவுகளை "கடல் ஒதுக்கிடம்" (Marine Reserve) என்ற பிரித்தானியாவின் 2010 பிரகடனம் சம்பந்தமான வழக்கில் அளிக்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பு சம்பந்தமாக மேன்முறையீடு செய்வது குறித்தும் ஆலோசித்து வருகின்றனர்.

"நாம் ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம்" என திரு.பான்கோல்ற் கூறுகிறார். போக்லாந்து தீவுகளின் மக்கள் தமது எதிர்காலம் குறித்து தீர்மானிப்பதற்காக இந்த வருடம் (2013) கருத்துக் கணிப்பு நடாத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது போன்ற அதே உரிமையையே எமது மக்களும் விரும்புகின்றனர் என அவர் கூறுகிறார்.

டியாகோகார்சியாவில் தொழிலாளர் வேலைகளுக்காகத் தான் 9 தடவைகள் விண்ணப்பித்ததாக பான்போல்ற் கூறுகிறார். இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அங்கு வேலை செய்வதற்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ளனர். ஆனால் சாக்கோசியர்கள் ஒருவர்கூட அந்தத் தளத்தில் வேலை செய்ய அனுமதிக்கப்படவில்லை.

சிறு குழுக்களான சாக்கோசியர்கள் மூன்று தடவைகள் அந்தத் தீவுகளுக்கு விஜயம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். 2006இல் எடுக்கப்பட்ட ஒரு வீடியோ காட்சி அவ்வாறு விஜயம் செய்தவர்கள் அந்த நிலத்தைக் கண்டு தேம்பி அழுவதையும், முத்தமிடுவதையும், ஒரு பிரித்தானிய அதிகாரி உணர்ச்சியற்று அவதானித்துக் கொண்டிருப்பதைக் காட்டுகின்றது.

அவர்லில் பெரும்பாலானவர்கள் வாழும் மொறிசியஸ் இன்று செல்வந்த சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு உல்லாசமான இடமாக இருக்கின்றது. ஆனால் சாக்கோசியர்களுக்கு அங்கு ஒரு கஸ்டமான வாழ்க்கையே எஞ்சியுள்ளது. அங்கு வாழும் பெரும்பான்மையான இந்திய வம்சாவழியினரை விட தாங்கள் இனரீதியாக வேறுபட்டிருப்பதால், வேலைவாய்ப்பில் தாங்கள் பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

ஒரு அமைதியான கடற்கரையோர வீதியில் தமது நினைவுகள் உயிர்வாழும் பொருட்டு ஒரு புகைப்படக்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...


படிப்பகம்

www.padippakam.com

# யாழ்ப்பாண 'அரச' வம்சத்தின் புத்தாண்டுச் செய்தி!

கீழே தரப்பட்டுள்ள 2014ஆம் ஆண்டுக்குரிய புத்தாண்டுச் செய்தி, யாழ்ப்பாணத்தை அரசாட்சி செய்த கடைசி 'அரச' வம்சத்தைச் சேர்ந்தவரென கூறிவருபவரும், தற்போது நெதர்லாந்தில் (ஒல்லாந்து) வசிப்பவருமான கனகராஜா என்பவரால் 'வானவில்' இதழுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகும்.

'வானவில்' இதைப் பிரசுரிப்பதையிட்டு சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். உண்மைதான். நாம் மன்னராட்சியையோ, நிலப்பிரபுத்துவ ஆட்சியையோ அல்லது இன்றைய முதலாளித்துவ ஆட்சியையோ அடியோடு ஏற்காதவர்கள். அத்துடன் யாழ்ப்பாணத்தில் மட்டுமின்றி, இலங்கையின் எந்தப் பாகத்திலும் எக்காலத்திலும் மன்னராட்சி ஒன்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதையும் புரிந்தவர்கள்.

ஆனால் இரண்டு காரணங்களுக்காக இந்த வாழ்த்துச் செய்தியைப் பிரசுரிக்கத் தீர்மானித்தோம்.

முதலாவதும் பிரதானதுமான காரணம், இன்று தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகச் சொல்லிக்கொண்டு, இனவாதிகளாகவும், ஏகாதிபத்திய அடிவருடிகளாகவும், தேசத்துரோகிகளாகவும் செயற்படுகின்ற பிற்போக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமையை விட, இன்னமும் அரச வம்சக் கனவுடன் தமது யாழ்ப்பாண அரசைத் தோற்கடித்த ஒல்லாந்து காலனியாதிக்கவாதிகளின் நாட்டில் வாழ்கின்ற அந்த அரச பரம்பரையின் ஒரு வாரிசென தன்னைத்தானே கூறிக்கொள்பவர், எவ்வளவு தூரம் நாட்டுப்பற்றுடனும், இன ஐக்கியக் கண்ணோட்டத்துடனும், மக்கள் நலன் சார்ந்தும் விடயங்களைப் பார்க்கிறார் என்பதை நமது வாசகர்களுக்குத் தெரியப்படுத்தவே.

இரண்டாவது காரணம், தமிழீழப் போராட்டத்தை ஆரம்பித்த தமிழ் தேசியவாதிகள் அடிக்கடி சொல்லும் ஒரு வாசகம், "ஆண்ட தமிழினம், மீண்டுமொருமுறை ஆள நினைப்பதில் தவறென்ன?" என்பதே. அவர்கள் குறிப்பிடும் அந்த ஆண்ட பரம்பரையின் வாரிசுகள் இன்னமும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்களாம் என்பதைத் தெரிவிப்பதும், அவர்கள் உங்களைப் போன்ற குறுகிய இனவாத சிந்தனைக்கு அப்பாற்பட்டே சிந்திக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பதற்காகவுமே. – **வானவில்**

## இதோ அந்த புத்தாண்டுச் செய்தி:

**ஆரிய சக்கரவர்த்தி அரச வம்சம் (Arya Cakravarthi Dynasty)**

**யாழ்ப்பாணத்தின் எச்.ஆர்.எச் ராஜா றெமிகியஸ் கனகராஜா (H.R.H. Raja Remigius Kanagarajah) விடுத்துள்ள 2014ஆம் ஆண்டுப் புத்தாண்டுச் செய்தி.**

*En Ilankai Tamil kakkal ellorukkum ulagam muluvathum paranthu vaalum Tamil makkal anaivarukkum en iniya puthu varuda nal vaalthukkal. Intha puthu varudathil, anaivaraum anaithu selvankalum pettu amaithiyana, nimmathiyana vaalkai vaala iraivanai piraathikiren.*

*Ma upan lak bime wesena siyalu denatath, sakala loka wasi sema siyalu denatath, me labannawu, 2014 nawa wasara, oba semata kiriyen paniyen thirena, samaya sathuta rajayana wasanawantha suba nawa was arak weva kiya mama prarthana karami.*

இலங்கையில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும், உலகம் முழுவதும் வாழ்கின்ற மக்களுக்கும் இந்தப் புதுவருடச் சந்தர்ப்பத்தில் எனது கனிவான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தப் புதுவருடம் இப்பொழுதும், வருடம் முழுவதும் சமாதானம், நல்லாரோக்கியம், செல்வம், மகிழ்ச்சி, செழிப்பு என்பனவற்றை வழங்க வேண்டும்.

2013இல் வட மாகாணசபைத் தேர்தல் நடைபெற்று, அம்மாகாணத்தின் முதலமைச்சராக முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டதையிட்டு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1988இற்குப் பின்னர் நடைபெற்ற முதவாலது வட மாகாணசபைத் தேர்தல் இதுவாகும்.

யுத்தம் முடிவடைந்துவிட்டது. மக்கள் நீதியையும், சமாதானத்தையும் வேண்டுகிறார்கள். மக்கள் தங்கள் வாக்குகளை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அளித்துள்ளார்கள். மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவது அவர்களினதும், அரசாங்கத்தினதும் கடமையாகும்.

வடக்கு கிழக்கில் எஞ்சியிருக்கும் இடம் பெயர்ந்தவர்கள் இனியும் தாமதமின்றி குடியேற்றப்படுவார்கள் என நம்புகின்றேன்.

பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக வெலிவேரியவில் (Weliweriya) பொதுமக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் மீது எனது ஆழ்ந்த அக்கறையைச் செலுத்த விரும்புகின்றேன். இந்த எதிர்ப்பின் போது தமது குழந்தைகளை இழந்த குடும்பங்கள் மற்றும் காயமடைந்த பொதுமக்களுக்கு எனது இதயபூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அதிகாரிகள் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழாதவாறு அவசியம் பார்த்துக் கொள்வதுடன், மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் அவர்களுடைய அடிப்படை உரிமைகளை மதிப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஊழல் என்பது உலகம் முழுவதும், குறிப்பாக வளர்ந்த, வளர்கின்ற நாடுகளில் மோசமான பிரச்சினைகளில் ஒன்றாக இருக்கின்றது. மக்கள் இலஞ்சம் கொடுப்பதை நிறுத்துவார்களானால், ஊழலை ஒழிக்க முடியும். ஊழல் சம்பந்தமான சட்டங்கள் கெட்டியாக இருப்பதுடன், ஊழலுக்கான தண்டனை கடுமையானதாக இருக்க வேண்டும். ஊழலில் ஈடுபட்டு கண்டுபிடிக்கப்படுபவர்கள் சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com

குடும்பங்களிலிருந்து காணாமல் போனவர்கள் சம்பந்தமாக விசேட ஆணைக்குழு அமைத்து முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பூரணமான விசாரணையின் பின்னர், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சரியான பதில்களை வழங்க வேண்டும். இந்தத் தீவிலிருந்து இவ்வாறான காணாமல் போதல்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு அதிகாரிகள் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இத்தீவில் 30 வருட உள்நாட்டு யுத்தம் நான்கு வருடங்களுக்கு முன்னர் முடிவுக்கு வந்தது. எல்லா இலங்கையர்களும் ஒரு புதிய தேசத்தைக் கட்டி எழுப்பி சமாதானத்துடனும், இணக்கப்பாட்டுடனும் வாழ வேண்டும். மக்கள் தமது வீடுகளை இழந்துள்ளார்கள், நேசத்துக்குரியவர்களை இழந்துள்ளார்கள், தமது கனவுகளை இழந்துள்ளார்கள். அவர்களது வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்காக பாதிக்கப்பட்ட மக்களுக்கும், பகுதிகளுக்கும் மீள் குடியேற்ற, மீள் கட்டுமான, மீள் அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர்ந்து நாம் அர்ப்பணிப்புடன் கட்டாயம் செய்ய வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேற்றப்பட்டிருப்பினும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான பணிகளை நாம் தொடர வேண்டும்.

துரதிஸ்டவசமாக சில குழுக்கள் இந்த நாட்டில் மதங்களுக்கிடையில் பதட்டத்தை உருவாக்க முயல்கின்றன. இந்தத் தீவில் வாழ்கின்ற நாம் வித்தியாசமான மொழிகள், இனங்கள், மதங்கள், பழக்க வழக்கங்கள் மற்றும் பாரம்பரியங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளோம் என்பதை நான் அன்புடன் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எல்லா இலங்கையர்களும் மற்றையவர்களுடைய மதங்கள், பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்கள் என்பவற்றை விளங்கிக் கொள்ளவும், அவற்றை மதிக்கக் கற்றுக் கொள்ளவும் வேண்டும். எல்லா இலங்கையர்களும் உண்மைச் சமத்துவமான பல்கலாச்சார சமூகமாக வாழ முடியும்.

இணக்கம் என்பதுதான் நாம் நம் முன்னோர்களிடமிருந்து பெற்ற மாபெரும் முதுசமாகும்.

இலங்கை இன மற்றும் மத நல்லிணக்கத்துக்கு ஒளிரும் உதாரணமாகவும், முன்மாதிரியாகவும் முழு உலகத்துக்கும் இருந்தது. துரதிஸ்டவசமாக எங்கள் தலைமுறை இலங்கையர்கள் நமது மூதாதையர்களிடமிருந்து கிடைத்த இந்த அருமையான கொடையை பாதுகாக்கத் தவறிவிட்டோம். எப்பொழுது இனத்துவமும் மதமும் வடக்கிலும் தெற்கிலும் இருந்த அரசியல்வாதிகளால் அரசியல்மயப்படுத்தப்பட்டதோ, அப்பொழுதே ஒருவருடன் ஒருவர் சண்டையிடுவது ஆரம்பித்துவிட்டது. துரதிஸ்டவசமாக சிலர் கடுமையாகப் பிரயத்தனப்பட்டுப் பெறப்பட்ட சமாதானத்துக்கு இடையூறு விளைவிக்கத் தொடர்ந்தும் முயல்கின்றனர். பூமியில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் சமாதானமாக வாழும் உரிமை உள்ளது. இது மிகவும் அடிப்படையான உரிமையாகும்.

எனது பணிவான விருப்பம் என்னவெனில், எல்லா இலங்கையர்களும் முன்வந்து இணக்கமான இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். மாற்றத்திற்குப் பயப்படக்கூடாது. நீங்கள் உங்கள் சிந்தனையை மாற்றுவீர்களானால், உங்கள் வாழ்க்கையை மாற்ற முடியும். சமாதானத்தை அடைவதற்கான வேகமான வழி உங்கள் சிந்தனையை மாற்றுவதுதான். சமாதானம் என்பது கஸ்டமானது எனச் சிலர் நினைக்கிறார்கள். எமது நாட்டில் சமாதானத்தையும், ஐக்கியத்தையும் அடைவதானால் நாம் ஒன்றிணைந்து வேலை செய்ய வேண்டும். எனவே, எல்லா இலங்கையர்களிடமும் நான் வேண்டுவது என்னவெனில், முழு நாட்டினதும் மகிழ்ச்சிக்காக எல்லோரும் முன்வந்து கரம் கோருங்கள் என்பதே. எல்லோருக்கும்

**எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

**உங்கள் எல்லோருக்கும் ஸ்ரீ கைலாசநாதர் கடவுளின் அருள் கிடைக்குமாகுக!!**

**இராஜதானி**
**நெதர்லாந்து**

முன்பக்கத்தொடர்ச்சி…

இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் அடக்கம்) ஏற்படுத்தப்பட்ட தமிழ் தேசிய வெறியின் அலை தி.மு.கவையும் ஆட்டம் காண வைத்து, அதன் காரணமாகவே காங்கிரஸ் தலைமையிலான அரசிலிருந்து தி.மு.க வெளியேறுவதற்கான நிர்ப்பந்தத்தை உருவாக்கியது. இருந்தாலும் காங்கிரஸ் அரசு அடுத்த பொதுத்தேர்தல் வரை தனது ஆட்சிக்கடிவாளத்தை இழக்காது ஓட்டி வந்துள்ளது.

இந்த நிலைமைகளால் இன்று காங்கிரஸ் கட்சி தனிமைப்பட்டு பலவீனமடைந்துள்ளது. அதன் பலவீனத்துக்கு அதனிடம் இருந்து தோழமைக் கட்சிகள் விலகிக் கொண்டது மட்டும் முழுக் காரணமல்ல. அதன் ஆட்சிக்காலத்தில் அதன் அமைச்சர்களாலேயே மேற்கொள்ளப்பட்ட (அதில் தி.மு.க அமைச்சர்களும் அடக்கம்) பல இலட்சம் கோடி ரூபா ஊழல் மோசடிகள், அந்நிய முதலீட்டுக்கு (இதில் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய கம்பனிகளை அனுமதித்தது முக்கியமானது), விலைவாசி உயர்வு, வேலை இல்லாத் திண்டாட்டம், பொதுமக்களுக்கு – குறிப்பாகப் பெண்களுக்கு – பாதுகாப்பு இல்லாமல் போனது என, பல்வேறு காரணிகள் காங்கிரஸ் கட்சிக்குப் பாதகமாக அமைந்துள்ளன.

காங்கிரஸ் கட்சியின் இந்தத் தவறுகளை முன்வைத்து அதற்கெதிராகப் பிரச்சாரம் செய்வதிலேயே பா.ஜ.கவும், மூன்றாவது அணியும் குறியாக இருக்கின்றன. அவை இரண்டும் அரசியலில் எதிரும் புதிருமாக இருந்தாலும், இந்தத் தேர்தலில் அவை இரண்டினதும் குறி ஒன்றே. அதாவது காங்கிரஸ் அரசை ஆட்சியிலிருந்து அகற்றுவதே. இதில் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டால் ஆட்சிக்கு வரப்போவது இடதுசாரிகளின் மூன்றாவது அணி அல்ல. பா.ஜ.கவே வரும். யதார்த்தத்தில் மூன்றாவது அணியின் தவறான அரசியல் வியூகம் பா.ஜ.கவை ஆட்சிக்கு கொண்டு வருவதிலேயே சென்று முடியும்.

அப்படி பா.ஜ.க இந்தியாவில் ஆட்சிக்கு வருமாக இருந்தால், அது இந்திய மக்களுக்கு மட்டுமின்றி, முழு ஆசியாவுக்குமே ஆபத்தாக முடியும். முன்பும் பா.ஜ.க ஆட்சி செய்ததுதானே இனி என்ன அப்படிப் புதிதாக ஆபத்து வர முடியும் என சிலர் எண்ணக்கூடும். ஆனால் இப்போதைய நிலைமை முன்னையது போன்றதல்ல.

முன்பு பா.ஜ.க தனது இந்துத்துவ பாசிச முகத்தை மறைப்பதற்கு மிதவாதத் தோற்றம் கொண்ட வாஜ்பாயை ஒரு கவசமாகப் பயன்படுத்தியது. அத்துடன் ஆட்சி அமைப்பதற்காக தி.மு.க போன்ற மதச்சார்பற்ற மாநிலக் கட்சிகளையும் அரவணைக்க வேண்டிய தேவை அதற்கு இருந்தது. இப்பொழுது அப்படியெல்லாம் அக்கட்சி யோசிக்கும் நிலையில் இல்லை. அதனால்தான் இந்திய அரசியல்வாதிகளிலேயே மிகவும் மோசமான


படிப்பகம்

www.padippakam.com

மத, இன, சாதி வெறியரான குஜராத் முதல்வர் நரேந்திர மோடியை அது தனது பிரதமர் வேட்பாளராக எவ்வித தயக்கமும் இன்றி துணிந்து அறிவித்துள்ளது.

பா.ஜ.கவை வழிநடாத்தும் சங் பரிவாரங்கள்தான் அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து இந்து – முஸ்லீம் ஒற்றுமைக்கு ஆப்பு வைத்தவர்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. அதற்கும் மேலாக இந்து யாத்திரீகர்களை ஏற்றி வந்த கோத்ரா ரயில் எரிப்பு சம்பவங்களை சாக்காக வைத்து குஜராத்தில் மோடி தலைமையிலான இந்துத்துவ வெறியர்கள் ஆயிரக்கணக்கான முஸ்லீம் மக்களை – குழந்தைகள், வயோதிபர்கள், கர்ப்பிணிப்பெண்கள் என்றுகூடப் பார்க்காது – கொன்று குவித்தவர்கள். அவரது நடத்தை காரணமாகவே அவர் அமெரிக்கா வருவதற்கு விசா கூட மறுக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாது, பா.ஜ.கவின் பிரதான துணை அமைப்பான (காலஞ்சென்ற பால்தாக்கரே தலைமையிலான) சிவசேனாதான் மும்பாய் நகருக்குள் வேறு மாநிலத்தவர் வரக்கூடாது என தடை விதித்து பிராந்திய வெறியைக் கிளப்பியது. அப்படி வந்தவர்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடாத்தியது. இதே சிவசேனா தான் இதே மும்பாயில் முதன் முதலாக தமிழர்களுக்கு எதிராக இனக்கலவரத்தை முன்னின்று நடாத்தியது. பின்னர் இதே பால்தாக்கரே தான், இலங்கையில் புலிகள் முஸ்லீம்களை வடக்கிலிருந்து விரட்டி இனச் சுத்திகரிப்புச் செய்தபோது, பிராபகரனை வீரன் எனப் புகழ்ந்தவர்.

அப்படியான பா.ஜ.க ஆட்சிக்கு வருமானால், அதுவும் நரேந்திர மோடி தலைமையில் ஆட்சி அமைக்குமானால், இந்தியாவின் மதச்சார்பின்மை தோற்றம் அழிக்கப்படும். இனங்களுக்கிடையிலும், மதங்களுக்கிடையிலும் மோதல்கள் உருவாக்கப்படும். தனது அதிகாரத்தை இறுக்குவதற்காக மாநிலங்களிடம் இருக்கும் அற்ப சொற்ப அதிகாரங்களும் படிப்படியாகப் பிடுங்கப்படும்.

அதுமாத்திரமின்றி, பா.ஜ.க அரசு பின்பற்றப்போகும் தேசியவெறிக் கொள்கையால் அயல் உறவுகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும். பா.ஜ.கவின் கம்யூனிச விரோத, இஸ்லாமிய விரோத, பௌத்த விரோதக் கொள்கையால் சீனா, பாகிஸ்தான், இலங்கை, மியன்மார் போன்ற நாடுகளுடனான உறவுகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படக்கூடிய நிலைமைகள் ஏற்படும்.

அதேவேளை பெரும் கோப்பரேட் நிறுவனங்களினதும், முதலாளிகளினதும் செல்லப்பிள்ளையான பா.ஜ.க ஆட்சிக்கு வந்தால் சாமானிய மக்கள் இப்போதுள்ளதையும் விட மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவார்கள். அத்துடன் மோடியின் ஆட்சி ஏகாதிபத்திய சக்திகளின் விசுவாசியாகச் செயல்பட்டு, இந்தியாவின் அணிசேராக் கொள்கைக்குப் பங்கம் ஏற்பட்டு, அது அமெரிக்காவின் வலுவான இளைய கூட்டாளியாக மாற்றப்படும்.

இவ்வாறான மிகவும் மோசமான மத, இன,சாதி வெறி பிடித்த பா.ஜ.கவுடன் தான் தமிழ்நாட்டிலுள்ள வை.கோபாலசாமியின் ம.தி.மு.க, ராமதாசின் பா.ம.க, விஜயகாந்தின் தே.தி.மு.க போன்ற கட்சிகள் தேர்தல் கூட்டு வைத்துள்ளன. இந்தக் கட்சிகள் வாய்க்கு வாய் பேசி வந்த தமிழ்த் திராவிடம், மதச்சார்பின்மை, பகுத்தறிவுவாதம் என்பனவற்றை எல்லாம் அற்பத்தனமான ஒருசில பாராளுமன்றத் தொகுதிகளுக்காக காற்றில் பறக்கவிட்டு, சந்தர்ப்பவாத ரீதியாக பா.ஜ.கவுடன் தேர்தல் கூட்டுச் சேர்ந்துள்ளன. அதன் மூலம் இடதுசாரிகளாலும், பெரியார், அண்ணாத்துரை போன்றவர்களாலும் தமிழகத்தில் உருவாக்கப்பட்டிருந்த மதச்சார்பற்ற சூழலுக்கு ஆப்பு வைத்து, தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்துள்ளனர்.

மறுபக்கத்தில் ஆரம்பத்தில் முதலமைச்சர் ஆகும் நப்பாசையால் இடதுசாரிகளின் மூன்றாவது அணியில் இணைந்து, தமிழ்நாட்டில் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுடனும் தேர்தல் கூட்டுக்கு முன்வந்த ஜெயலலிதா, பின்னர் கம்யூனிஸ்ட்டுகளை கேவலமாக அவமதித்து துரத்திவிட்டு, தனியாகத் தேர்தலில் நிற்கிறார். அவர் தனது பிரச்சாரங்களின் போது காங்கிரஸ் கட்சியை மோசமாகத் தாக்குகின்ற அதேவேளையில், பா.ஜ.க பற்றி வாயே திறக்காமல் இருக்கிறார். இன்னொரு இந்துத்துவவாதியான ஜெயலலிதா பா.ஜ.கவை ஆதரிப்பதிலோ அல்லது எதிர்காலத்தில் அந்தக் கட்சி ஆட்சி அமைத்தால் அதில் சேர்ந்தாலோ ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இன்னொரு பக்கத்தில் கருணாநிதி அடுத்து அமையப்போவது மீண்டும் காங்கிரஸ் ஆட்சியா அல்லது பா.ஜ.க ஆட்சியா என்ற குழப்பத்தில் மதில் மேல் பூனையாக இருந்து கொண்டிருக்கிறார். 'இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன, நமக்கு ஆட்சியில் பங்கும் அமைச்சுப் பதவிகளும் கிடைத்தால் போதும்' என்ற கொள்கையுடைய அவர், பின்னர் ஆட்சிக்கு வரும் அரசுடன் சேர்ந்துகொண்டு அதற்கு ஒரு பகுத்தறிவு விளக்கம் வேறு கொடுப்பார்.

இதில் தமிழ்நாட்டில் பரிதாபத்துக்குரியவர்கள் தனித்துவிடப்பட்ட காங்கிரஸ் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சிகளும்தான். இதை அவர்கள் ஒரு படிப்பினையாக எடுத்துக்கொண்டு, தத்தமது கட்சிகளை சுயாதீனமாகக் கட்டி வளர்த்தால் எதிர்காலத்திலாவது அவர்களுக்கு தமிழ்நாட்டில் ஏதாவது இடம் கிடைக்க வாய்ப்புண்டு.

எது எப்படிப் பார்த்தாலும், இன்று தமிழ்நாட்டு மக்கள் உட்பட இந்திய மக்களின் முன்னால் உள்ள ஒரேயொரு பிரச்சினையும், கடமையும் காங்கிரசைத் தோற்கடிப்பது என்பதை விட, மத, இன, சாதி வெறி பிடித்த பாரதீய ஜனதா கட்சியை ஆட்சிக்கு வராமல் தடுத்து தேசத்தைப் பாதுகாப்பதுதான். *

---

10ம் பக்கத்தொடர்ச்சி...

கண்காட்சியை சாக்கோசியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். டியாகோகார்சியாவிலுள்ள பிரித்தானிய பொலிசாரின் நாய்கள் தீவுவாசிகளை விட நன்கு பராமரிக்கப்படுகின்றனர். இதுபற்றி, "மனிதர்களை விட மிருகங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன" என பான்கோல்ற் கூறுகிறார்.

(இக்கட்டுரை கனடாவிலிருந்து வெளிவரும் Globe and Mail பத்திரிகையில் வெளியான கட்டுரையொன்றைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. அப்பத்திரிகைக்கு எமது நன்றி) *

---

12ம் பக்கத்தொடர்ச்சி...

அருகதையற்று நிற்கிறது. இது இலங்கை தமிழ் – சிங்கள கலை இலக்கியங்களுக்கும் சாலவும் பொருந்தும்.

இந்தியாவில் மற்றைய மொழி இலக்கியங்களை விட வங்காள, மலையாள இலக்கியங்கள் முன்நிலையில் திகழ்வதற்கு, அந்த மாநில மக்களைச் செதுக்கிய இடதுசாரிச் சிற்பிகள்தான் காரணம் என்பது சொல்லவும் வேண்டுமோ?

இந்த 'நாலுகட்டு' நாவலில் இன்னொரு குறிப்பிடக்கூடிய விடயமென்னவெனில், இதில் பயன்படுத்தப்பட்டுள்ள சில சொற்கள் தமிழ்நாட்டில் பயன்பாட்டில் இல்லாத, ஆனால் யாழ்ப்பாணத்தில் பயன்பாட்டில் உள்ள சொற்களாகும். *


படிப்பகம்

www.padippakam.com

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

## கடைசிப் பக்க குறிப்புகள்:

# சம்பந்தன் பொதுமக்களுக்காக அரசாங்கத்திடம் பிச்சை எடுக்க மாட்டாராம்! ஆனால் தனக்காக எடுப்பார்!!

அரசாங்கத்திடம் பிச்சை எடுத்து தமிழ் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை தமக்கு இல்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவரும், அவ்வமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் சமீபத்தில் வைபவம் ஒன்றில் பேசும்போது கூறியிருக்கிறார்.

ஏறத்தாழ இதே கருத்துப்பட வட மாகாணசபை விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் ஒரு வைபவத்தில் பேசும்போது கூறியிருக்கிறார். அதாவது அவர் தனது பேச்சில் அரசாங்கம் வடக்கில் பல அபிவிருத்தி வேலைகளை முனனெடுத்து வருகிறது என்பது உண்மைதான் என்ற போதிலும், அது எமக்கு முக்கியமில்லை, தமிழ் மக்களின் விடுதலைதான் முக்கியம் என்று கூறியிருக்கிறார்.

இந்த இரண்டு பேரும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக் குட்டையில் ஊறிய ஒரே மட்டைகள். இவர்கள் அப்படித்தான் பேசுவார்கள். அப்படி அவர்கள் பேசுவதற்கான துணிச்சலைக் கொடுத்தவர்கள் வேறு யாருமல்ல தமிழ் பொதுமக்கள்தான். ஏனெனில் அவர்கள் எப்போதும் அரசாங்கத்திடமோ அல்லது ஏனையவர்களிடமோ தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொண்டு, தமது வாக்குகளை மட்டும் இந்த மலட்டு அரசியல்வாதிகளுக்குப் போட்டு வருகிறார்கள்.

கடந்த வட மாகாணசபைத் தேர்தலின்போது கூட, வட மாகாண மக்கள் அந்தவிதமான கேடுகெட்ட கைங்கரியத்தைத்தான் செய்தார்கள். 30 வருடங்களாக விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் புலிகளிடமும், இதர ஆயுதக் குழுக்களிடமும் அவர்கள் பெற்ற துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல. ஆட்சிக்கு வந்த எல்லா அரசாங்கங்களையும் ஏமாற்றி புலிகள் தமது நாசகார யுத்தத்தை முன்னெடுப்பதற்கு இந்த பொதுமக்கள் ஆதரவாகத்தான் இருந்தார்கள். இல்லை, இல்லை அவர்கள் பயத்தினால்தான் அப்படி இருந்தார்கள் என்று யாராவது சொன்னால் அது பொய்ப் பேச்சு.

அப்படி பயத்தினால்தான் புலிகளுக்கு ஜால்ரா போட்டார்கள் என்றால், புலிகள் அழிக்கப்பட்ட பிறகு நடந்த தேர்தல்களில், அதுவும் யார் பார்வையும் படாமல் இரகசியமாக வாக்களிக்கும் தேர்தல்களில் தம்மை அழிவிலிருந்து காப்பாற்றியதுடன், புனர்வாழ்வும் அளித்த உண்மையான சக்திகளுக்கு அவர்கள் வாக்களித்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. இப்படியாக கண்ணைத் திறந்துகொண்டு பாழும் கிணற்றில் விழும் தமிழ் மக்களின் செய்கைதான் சம்பந்தன், ஐங்கரநேசன் போன்றோர் இப்படித் திமிர்த்தனமாகப் பேசுவதற்கு இடம் கொடுத்திருக்கிறது.

இந்த சம்பந்தன் தான் ஏதோ பெரிய பரிசுத்தவான் போலவும், ஒன்றுக்கும் ஆசைப்படாத துறவி போலவும் பேசுவதில் ஏதாவது உண்மையுண்டா? எள்ளளவும் கிடையாது. இவரது கடந்தகால வரலாறே பாம்புக்கு தலையையும், மீனுக்கு வாலையும் காட்டிய வரலாறு தானே?

புலிகள் அழிக்கப்படுவதற்கு முன்னர் இந்த சம்பந்தன் வகையறாக்களால் தமது தொகுதிகளுக்குத் தன்னும் சுதந்திரமாகப் போய்வர முடிந்ததா? புலிகள் அழைத்தால் மட்டும் கிளிநொச்சிக்குச் சென்று அரசியல் ஞானசூனியங்களான அன்ரன் பாலசிங்கத்திடமும், தமிழ்செல்வனிடமும் அரசியல் வகுப்பு எடுத்து வந்தார்கள். மறுபக்கத்தில் அரசாங்கத்திடம் இரகசியமாகக் கதைத்து தமக்கான சலுகைகளையும் பெற்றுக் கொண்டார்கள்.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் புலிகளால் தனது உயிருக்கு ஆபத்து என்று அவரிடம் இரகசிய முறைப்பாடு செய்து, கொழும்பில் பாதுகாப்பான இடத்தில் வீடும், குண்டு துளைக்காத காரும், பொலிஸ் பாதுகாப்பும், இதரப ல சலுகைகளும் இந்த இரா.சம்பந்தன் பெறவில்லையா? அவர் நேர்மையானவர் என்றால் பகிரங்கமாக இதை மறுக்கட்டும் பார்க்கலாம்.

இப்படியெல்லாம் செய்த அவர் இப்பொழுது பொதுமக்களின் தேவைகளுக்காக அரசாங்கத்திடம் பிச்சை எடுக்க மாட்டேன் என வாய்ச்சவடால் அடிக்கிறார், தன்மானம் பேசுகிறார். புழுத்து நாற்றம் எடுக்கும் தமது கடந்த கால அரசியல் வரலாற்றை மறைப்பதற்காக தனது உடலில் ரோசம் கொப்பளிப்பதாக படம் காட்டுகிறார்.

அப்படி ரோசமானவர்களாக இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் இருந்தால், முதலில் இலங்கை அரசாங்கத்தின் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதையும், அந்தப் பதவியால் கிடைக்கும் கொழுத்த சம்பளம், சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்களையும் உதறித்தள்ள வேண்டும். அதைவிடுத்து தாங்கள் அரசாங்கத்திடம் எல்லாவிதமான நன்மைகளையும், சலுகைகளையும் பெற்றுக்கொண்டு, சாதாரண மக்களுக்காக மட்டும் அரசாங்கத்திடம் "பிச்சை எடுக்க மாட்டேன்" என்று சொல்வது வடிகட்டின அயோக்கியத்தனமே தவிர வேறொன்றும் அல்ல.

இந்த விதமான அயோக்கியத்தனமான அரசியல்வாதிகள் மத்தியில் புதிதாக அரசியலுக்கு வந்துள்ள வட மாகாண முதலமைச்சர் சொல்லும் சில கதைகள் சற்று வித்தியாசமானவையாகத் தெரிகின்றன. அவர் அண்மையில் ஒரு வைபவத்தில் பேசும்போது, தமிழ் மக்களுக்கு தீர்க்கப்பட வேண்டிய பல அடிப்படைப் பிரச்சினைகள் இருக்கின்றன என்ற போதிலும், அவர்களுக்கு அபிவிருத்தியும் மிக முக்கியமானது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் இவ்வாறு கூறியதற்கு சில காரணங்கள் – அதாவது அரசியலுக்கு புதியவர், நீதிபதியாக இருந்தவர், இடதுசாரி அரசியல்வாதியான வாசுதேவ நாணயக்காரவை திருமண சம்பந்தியாகக் கொண்டிருப்பவர் போன்றவை – இருக்கலாம்.

ஆனாலும் எதனோடு சேர்ந்த பசுக்கன்றும் கெட்டுப் போவதற்குச் சந்தர்ப்பம் இருக்கின்றது. *


படிப்பகம்